இனங்கொல்லி

*

எந்தமிழ்க்குப் பிறராலே வருந்தீங்கும்
இடர்ப்பாடும் எள்ளுக் கென்றால்,
செந்தமிழர் எனக்கூறிச் செருக்கிடுவார்
செய்ந்தீங்கு பறங்கிக் காயாம்!
வெந்தழலில் வெந்துதவும் நீர்வந்து
விழுங்கியதும் போக, எஞ்சும்
செந்தமிழ்நூற் பெருமையெல்லாம் இவர்விழுங்கிச்
செரிக்கின்றார்! இனங்கொல்வாரே!

*

தென்மொழி

ஆசிரியர்
பெருஞ்சித்திர

1—11—59

இலக்கிய
திங்கள் ஏ

25
காசுகள்

கட்டுரை, கதை, பாட்டு எழுதுவார் கருத்துக்கு.

தென்மொழிக்கு அன்பர், மாணவர் பலரிடமிருந்தும் கட்டுரை, கதை, பாட்டு முதலியன அளவிறந்து வந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் அளவு கண்டு மகிழ்வும், உட்பொருளும், நடையுங் கண்டு வருத்தமும் அடைகின்றோம். வருகின்ற உருப்படிகளுள் பாட்டுக்களே மிகுத்திருக்கின்றன: அவை முற்றும் பிழைபட்டிருப்பதுடன், உயர்வான கருத்துக்களையும், தம்முட் கொண்டிராமல் விளங்குகின்றன. சிலர் அளவிறந்த பக்கங்களில்எழுதிக் குவித்திருக்கின்றனர். தென்மொழியில் மூன்று நான்கு பக்கங்களுக்கு மிகாமல் எழுதுமாறு அவரைக் கேட்டுக்கொள்கின்றோம். மேலும் அவர் கீழ்வருவனவற்றையும் கருத்திற்பதிக்க வேண்டுகின்றோம்.

1. மாணவரும், பிறரும் எழுதும் உருப்படிகளை ஆங்காங்குள்ள நல்ல தமிழ் ஆசிரியரிடமும், தமிழ் அறிஞரிடமும் காட்டிச் செம்மை செய்யப்பெற்று அனுப்புதல் வேண்டும்.
2. அனுப்பியவுடனேயே தென்மொழியில் வராமையால் கவலுற வேண்டாம். நல்ல உருப்படிகள் காலந் தாழ்ந்தேனும் உறுதியாய் வெளிவரும்.
3. தென்மொழியில் வராதனவும், திருப்பிப்பெறப் போதிய அஞ்சற்றலை வைக்கப்பட்டனவும், உடனுக்குடனன்றியேனும், எவ்வாறாயினும் அவற்றை எழுதிய ஆசிரியர்க்கு வந்தே தீரும்.
4. அவைபற்றிய எவ்வகை மடலும் எழுதப்படமாட்டாது.
5. அச்சுக்கு வராக் கட்டுரை, கதை, பாட்டு அத்தனையும் காக்கப்படுகின்றமையால், முன்னால் அஞ்சற்றலையனுப்பத் தவறியவரும் பின்னால் அனுப்பி அவற்றைத் தருவித்துக் கொள்ளலாம்.
6. நல்ல தமிழில், நல்ல கருத்துப்பற்றி, எழுதப்பட்ட கட்டுரை, கதை, பாடல்களே வெளிவரத்தக்கன.

— ஆ. ர்.

கருத்திற் பதிக்க.

இவ்விதழில் வரும் கதை, கட்டுரை பாடல்களின் கருத்துக்களும், பெயர்களும், அவற்றால் வரும் நிறை குறைகளும் அவற்றை எழுதிய ஆசிரியர் தம்மைச் சாருமேயன்றி இதழ் ஆசிரியரை எவ்வகையானும் சாரா.

— ஆசிரியர்.

தென்மொழி

இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்தம் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

இயல் 1 | திருவள்ளுவராண்டு 1990 ஐப்பசித்திங்கள் 15. (1-11-59) | இசை 7

நாடும் இலக்கியமும்.

மாந்தன் தன் உடல் வளத்திற்கு உணவைத் தேடி உண்டு, உவந்து, உறங்கிய நேரம் போக, எஞ்சிய பெருங்காலத்தில் வீணே குந்திக் கிடவாமல் உள்ளத்தின் இன்பத்திற்குத் தலையாய கரணப் பொருளாயமைந்த அறிவுணர்வு எழப்பெற்று அதில் மூழ்கிக்கிடந்து அறிவின்பம் நுகருந் திறமை பெற்றவன். பறவைகட்கும் விலங்குகட்கும் உணவு தேடுதலில் அரைப்பங்கும், உறக்கத்தில் காற்பங்கும், புணர்வின்பத்தில் ஒரு சிறு பங்கும் கழிய, எஞ்சியுள்ள வாழ்க்கை நேரம், அசையாது படுத்துக் கிடப்பதில் கழிகின்றது. மாந்தர்க்கு அரிதே கிடைத்த அவ்வுயர்வான பொழுதில் தனக்கும், பிறர்க்கும் இன்பம் ஊட்டியும், ஊட்டுவித்தும் அவர் வாழாமல், விலங்கும் பறவையும் போல் கொன்னே தெருவலம் வருதலும், குந்திப் படுத்துப் புரண்டுடல் தொய்தலும் செய்குவானாயின், அவன் வாழ்வை மாந்தன் வாழ்வெனலாமோ? அற்றாயின், அது விலங்கு வாழ்வே.

இனி அவ்விலங்கு வாழ்வொழித்து மக்கள் தமக்கு வந்து வாய்க்கும் பொழுதுகளைக் கழிக்குமாறு என்னையோவெனின், கூறுதும். யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம் என ஒவ்வொருவரும் எண்ணித் தந்தம் வாழ்க்கையில் கண்டன

வற்றையும், கேட்டனவற்றையும், வாழப் புகுவார்க்கு உரைத்தலும், அஃதேபோல் தாந்தம் வாழ்விற் காணுதவற்றையும், கேளாதவற்றையும் வாழ்ந்து சென்ருர் வழியும், வாழ்தலறிந்தார் வழியும் கேட்டலுமே அப்பெரும் பொழுதைக்கழிக்கும் பேரின்பமாம். விலங்குகட்கும், பறவைகட்கும் இத்தகைய பெரும்பேறு இன்ரும் என்க. என்னே? வாழ்க்கையைப்பற்றிப் பேசுதலும், பேசக் கேட்பதுமே வாழ்வாகுமோ என்பார்க்கு, நாம் வாழ்க்கையின் முழுப் பொழுதையும் அவ்வாறு கழிக்க வழி கூருமல் அதன் ஒரு பகுதியைக் கழித்தற்கே வழி கூறுகின்ரேம் என்க.

இனி மாந்தருள் எல்லோரும் பேசத் தொடங்கிடில், கேட்பவர் ஒருவரும் இலராதலாலும், எல்லோரும் கேட்கத் தொடங்கிடில், பேசுபவர் ஒருவரும் இலராதலாலும், கற்றவர் ஒரு சிலர் பேசவும், கல்லாதவர் ஒருசிலர் கேட்கவும் ஆயினர் என்க. அவ்வாறு ஒருவர் ஓரிடத்திருந்து பேசுதலே, நாட்டின் பிற விடங்களில் வாழும் எல்லோரும் கேட்க வியலாதவராய்ப் போவர் என்பதாலும், ஒரு காலத்தே பேசுதலேப் பிற்காலத்தே வாழப்போகும் மக்கள் அறிய வழியிலேயே என்பதாலும் பேசத் திறன் பெற்றவர், பேசத்தக்கனவற்றை எழுதியும் வெளியிட்டனர் என்க. அவ்வாறு எழுதப் புகுந்தவர், பல்வகை வாழ்க்கை வழிகளேயும் பல அற நெறிகளேயும், ஒழுக்க விழுப்பங்களேயும், அறிந்தாராதல் வேண்டுமன்ரே? அத்தகைய சான்ரேரே அவ்வாருன உயர் நூல்களே எழுதி மக்கள் வாழ்விற்கு இலக்குக் (குறிக்கோள்) காட்டுவாராயினர். **அவ்வாறு மக்கள் வாழ்விற்கு இலக்காக அமைந்த நூல்களெல்லாம் இலக்கியம் எனப்படுவதாயிற்று.**

இவ்விலக்கியத்தை ஊன்றிக் கற்பார் வாழ்வில் அறநெறி விருப்பமுடையவராய்த் தாமும் வாழ்ந்து, பிறரும் வாழ இடங்கொடுக்கும் அருளாளராய் அமைதலும், அவ்வாறு இலக்கியத்தைஊன்றிக் கல்லாதார் தாமே வாழ்தல் வேண்டும், பிறர் எக்கேடுகெட்டு, எத்திக்கிற் போனுலென்ன என்னும் விலங்குக் கொள்கையுடையவராக வாழ்தலும் கண்கூடு. கள்ளரும், கொள்ளேயரும், கொலேஞரும், இலக்கியங் கல்லாதவரே என்பதும், அவ்வாறு கொடுதொழில் மேற்கொண்டோர் சான்ரேரை வழிமடக்கிக் கொள்ளேயடிக்குங்கால் அவர் சொன்ன அற வழிகட்கு, அடிபணிந்து அவரை ஏதுஞ் செய்யாது விட்டார் என்று, நாம் பழம் நூல்களிற் காண்பதும் மேலே நாம் கூறியவற்றிற்குத் தக்க சான்றுகளாகும்.

இனி மாந்தர், தனியொருவரின் ஒரு சில வாழ்வு நிகழ்ச்சிகளைக் கேட்பதினும். ஒருவரின் முழு வாழ்க்கையையும் கேட்க அவாவினராதலால், கதை தழுவிய இலக்கியங்களும் எழலாயின என்க.

இவ்விலக்கியம் மூன்று சிறப்புப் பிரிவுகளாக அமைவதாகும். அவை 'இப்படி இருந்தது' என முற்கால நிகழ்வு கூறும் இலக்கியமும் 'இப்படி இருக்கின்றது' என தற்கால நிகழ்வு கூறும் இலக்கியமும், 'இப்படி இருக்கும் அல்லது இப்படி இருத்தல் வேண்டும்' என எதிர்கால நிகழ்வுகூறும் இலக்கியமும் என்பனவாம். இம் மூன்றுள்ளும் முன்னையதின் பின்னையது சிறப்புப் பெறுவதாகும்.

இலக்கியம் இன்றேல் மொழி வளராது. ஒரு நாட்டு மொழி பல்லாற்றானும் பல்கிச் சிறப்புற்று வளர, இலக்கிய வளர்ச்சி இன்றியமையாதது.

இலக்கியத்தில் உயர்ந்தது தாழ்ந்தது என்பதன்றிப் பழையது புதியது எனும் பிரிவுகள் பொருந்தா. மிகப் பழைய இலக்கியமும் தன் குறிக் கோளில் உயர்ந்த தாயின், மிகப் புதிய இலக்கியமே.

இலக்கியம் ஒருவருக்கே அன்றிப் பலருக்கும் ஆவதும், ஒரு ஊருக்கே அன்றிப் பல ஊர்களுக்கும் பொதுவானதும், ஒரு நாட்டிற்கே அன்றிப் பல நாடுகட்கும் ஏற்றதும், ஒரு தீவிற்கே அன்றி உலகத்துக்கே பொருந்துவதும் எனப் பல வகைத்தாம்.

இனி, இவ்விலக்கியச் சிறப்புக்களை எல்லாம் ஒருங்கே தம்முட்கொண்டு இலங்கும் இலக்கியங்கள், நந்தமிழ் மொழியிற் பலவாம். நம் இலக்கியங்கள், யாவும், உலகத்தைநோக்கி உலகத்தார் உய்யும் பொருட்டுச் செய்யப் பெற்றனவாம் என்பதை அவற்றை ஊன்றிக் கற்பார் தெள்ளிதின் உணர்வர்.

இலக்கிய இலக்கணங்கற்ற சான்றோர் உடைய நாடு நம்முடையதாக இருந்தது. அப்படி எண்ணற்ற அறநூல்கள் உள்ள நம் நாட்டிலன்றோ, மக்கள் இன்று ஒற்றுமை குலைந்து, தம்முட் பல பிரிவினராய்ச் சீரழிந்து, போக்கற்றுப் புலன் குன்றிக் கொலைத் தொழிலிலும், புலைத் தொழிலிலும் வல்லவராகி, மக்கள் உள்ளங்கள் எல்லாம் சேற்றுப் பள்ளங்களாகப் போமாறு வாழ்கின்றனர். கற்றோர்க்கும் கேட்டார்கும் களிப்பூட்டுவனவாகிய, நம் இலக்கியங்களெல்லாம் அழிந்துபட்டனவா? அல்லது புறக்கணிக்கப் படுகின்றனவா? அவ்வாறாயின் கானலை நீரென்று மயக்குறும் மக்கள் வேறு எவற்றை நாடித் திரிகின்றனர்? இந்நிலையில் நாம் செய்யவேண்டுவன எவை? என்பனபற்றி அடுத்த உரையில் ஆய்வோம்.

யாழ் முறிந்தது.

இசை மன்னர் எம். கே. தியாகராச பாடகர் அண்மையில் மறைந்தமை கேட்டு, உளம் வருந்தினோம், அவரது இனிமைசான்ற குரலிசையை தமிழகம் இழந்தது. ஏழிசைத் திறன் பொதியப் பாடும் ஆற்றல் பெற்றவர் தியாகராசர். ஒருகால் ஒரு திரைப்படத்திற்குப் பேசி முடித்து, வடநாட்டு வண்ணத்தில் தோய்ந்த ஒரு பாடலைப் பாடுமாறு கேட்க, தமிழ் மரபு போற்றிய தியாகராசர், அதை மறுத்து, தென்னிசை முழக்கும் வாயால் வடவிசையைப் பாடமாட்டோம்" என்று கூறி, அவ்வொப்புதலைத் தள்ளினர் என்பதோடமையாது, இறுதிவரை, அக்கொள்கையோடிருந்தார் என்னின் அவர் தமிழிசைப் பற்றைப் போற்ருமலிருத்தல் இயலாது.

இசை வல்லுநர் மட்டுமன்றி, இயற்கையொடு பொருந்திய நடிப்பிலும் சிறந்தவராவே தியாகராசர் இருந்தனர். அவர் நடித்த அம்பிகாபதியில் அவரையன்றி புலவர் வழிவந்த கம்பர் மகனர் அம்பிகாபதியினையே பார்த்து மகிழ்ந்தோம். மேலும் அவர் பாடி நடித்த மற்றைய படங்களிலும் அவரின் கண்குளிரும் தமிழ் நடிப்பும், காதுகுளிரும் தமிழ் இசையும், கருநாடக இசையும் நம்மால் மறக்கற்பாலனவல்ல.

பொதுவில், தமிழ்நாட்டின் இசைத்துறையில் ஒரே யாழாக விளங்கிய அவர்குரல் ஓய்ந்துபோனது, இசைத் தமிழ்க்குப் பேரிழப்பே. அவரைப்பிரிந்து ஆருத்துயரெய்திய தமிழன்பர்க்கும், அவர் துணைவியர், மக்கள், உறவினர்க்கும் எம் இணையிலா வருத்தமும், இரக்கமும் உரியனவாகுக. அவர் புகழ் நீடு வாழிய.

— ஆசிரியர்.

வினு விடைப் பகுதி (!)

இவ்விதழில் இடம்பெற விருந்த வினுவிடைப் பகுதி பல்வகை இடர்ப் பாடுகளால், பொங்கல் இதழ்க்குப் பின்னர் தொடங்கப் பெறும் என்பதை அன்பர்க்கு அறிவிக்கின்றோம்,

(— ஆர்)

காலத் தாழ்த்தம்

குறித்த காலத்தே வாராமல் அச்சுத் தொல்லைகளினல் தென்மொழி காலந்தாழ்த்தே வெளி வருகின்றமைக்கு மிகவும் வருந்துகின்ரேம். இத்தொல்லைகள் நீக்கப்பெற்ற தென்பதையும், இனி 'தென்மொழி' குறித்த காலத்தே வெளிவரும் என்பதையும் பணிவுடன் கூறிக்கொள்கின்ரேம்.

(-ஆர்.)

என் பெயர் என் சொல்?

(ஞா. தேவநேயப்பாவாணர் எம், ஏ.)

மொழியைப் பொறுத்தவரையில் நான் மறைமலையடிகளை முற்றும் அடியொற்றிச் செல்பவனுயிருந்தும், தமிழ்ப் பேராசிரியர் பலரும் மொழியாராய்ச்சியின்மையானே என்பெயரையும் வடசொல்லென ஐயுற்றும் நம்பியும் வருகின்றனர். அவர் மயக்கறுப்பான் எழுந்ததிக்கட்டுரை.

I தேவன்.

எக்காலத்தும் மாந்தர் தெய்வ வழிபாடாற்றுதற்குக் காரணம், நன்மை செய்யும் பொருளிடத்து அன்பும், தீமைசெய்யும் பொருளிடத்து அச்சமுமே. எல்லாம் வல்ல இறைவன் வழிபாட்டில் இவ்விரு மெய்ப்பாடுகளும் கலந்துள்ளன. இறைவன் இறுதியில் பேரின்பந்தருவான் என்பது நன்மையும், எரிநிரயத்தில் இடுவான் என்பது தீமையும் பற்றிய உணர்ச்சிகளாகும்.

வெளியொழிந்த நாற்பூதங்களுள் ஒவ்வொன்றும் நன்மையும் தீமையுஞ் செய்யுமேனும், அவற்றுள் தீயே அவற்றைச் சிறப்பாக அல்லது தெளிவாகச் செய்வதாம். அதனால், முதற்கால மாந்தர் அதனையே சிறந்த தெய்வமாகப் போற்றிவந்தனர். அது பற்றித் தெய்வப் பொதுப்பெயரும், முழுமுதற் கடவுட்பெயரும் தீப்பெயரினின்று தோன்றியுள்ளன.

கட்புலனைப் பயன்படுவிக்கும் ஒளியும், சமையற்கு வேண்டும் சூடும், குளிரைப்போக்கும் வெம்மையும், உணவுப்பயிர்க்கு வேண்டும் வெப்பமும், தீயினால் உண்டாகும் நன்மைகளாம்; தீண்டினாற் சுடுவதும், அகப்படின் எரித்துக் கொல்வதும், அதனால் விளையும் தீமைகளாம். நாற் பூதங்களுள்ளும், சிற்றளவிலிருப்பினும் தீமை செய்வது தீயேயாதலின், தீமைப்பெயர் அதனின்றே தோன்றிற்று.

மரத்தொடு மரமும் கல்லொடு கல்லும் உரசும்போதும் நெரியும்போதும் நெருப்புண்டாவதைக்கண்ட முதற்கால மாந்தர், அவ்வகையிலேயே நெருப்புண்டாக்கக் கற்றுக்கொண்டனர். அதனால், உரசல், நெரிசல், தேய்தல் முதலிய உராய்தற் கருத்துச் சொற்களினின்று, தீயைக்குறிக்கும் பெயர்கள் தோன்றியுள்ளன.

உரசு, உராய், உராய்ஞ்சு, உரிஞ், உரிஞு, உரிஞ்சு, உரை, உரைசு, உரைஞ்சு, உரோசு, உரோஞ்சு என்பன ஒருவேர்ப்பிறந்த ஒரு பொருட்சொற்கள்.

உர்: உர்—உரு உருத்தல் = அழலுதல்.
"ஆகம் உருப்ப நூறி" (புறம். 25, 10).
உரு—உரும்—உரும்பு = கொதிப்பு.
"உரும்பில் கூற்றத்தன்ன" (பதிற்றுப். 26, 13).
உரு - உருமம் = வெப்பம். நண்பகல்,
உருமகாலம் = கோடைக்காலம்,
உருமித்தல் = புழுங்குதல்,
உரு—உருப்பு = வெப்பம்.
"கன்மிசை உருப்பிறக் கனைதுளி சிதறென" (கலித். 16, 7)
உருப்பு—உருப்பம் = வெப்பம்.
"கனலும்..........உருப்பமெழ" (அரிச். பு. விவா. 104)
உரு - உருகு – உருக்கு – உருக்கம்.
உருகுதல் = வெப்பத்தினால் இளகுதல், மனம் இளகுதல் (இரங்குதல்).
உருக்கு = உருகின இரும்பு (எஃகு).
உருக்காங்கல் = உருகிப்போன செங்கல்.
உர்–உரி = நெருப்பு (கன்னடம், துளுவம்).
உரி என்னும் வடிவம் தமிழில் வழக்கற்று மறைந்தது.
உரி–எரி = நெருப்பு.
நெருப்பைக் குறிக்கும் 'உரு' வேர் தமிழ்ச் சொற்கள் பிறமொழிகளிலும் சென்று வழங்குகின்றன.
இலத்தீன் (Latin)—உர், (to burn)
அர்மீனியம் (Armenian) ஓர் = நெருப்பு.
ஆபுக்கானியம் (Afghan)—ஓர், வுர் = நெருப்பு.
எபிரேயம் (Hebrew) - ஊர் = நெருப்பு, ஓர் = ஒளி.

நெர்: நெர்—நெரி, நெரிதல் = நெருங்குதல், உரசுதல், நொறுங்குதல்,
நெர்—நெரு—நெருப்பு. நெருப்பு – நிப்பு (தெலுங்கு).
அரபியம் (Arabic)–நார் = நெருப்பு, நூர் = ஒளி,

தேய்: தேய்தல் = உரைசுதல்,
தேய் – தீய் – தீ = நெருப்பு, விளக்கு, நரகம்.
தீ—தீமை = தீயின்தன்மை, தீ, தீய = கொடிய,

தீய்தல் = எரிந்துபோதல், கருகுதல், பற்றிப்போதல்,

தீதல் = தீய்தல்.

ஏகாரம் ஈகாரமாய்த் திரிதலை, தேன்—தேம்—தீம் என்னும் திரிபிலும் கண்டுகொள்க.

தேய்—தேயு (சமற்கிருதம்) = நெருப்பு.

இத் 'தேய்' அடியினின்றே தெய்வப்பெயர் தோன்றிற்று.

தேய்—தேய்வு—தேவு—தேவன்,

தேய்வு தெய்வு—தெய்வம்.

தேவு—தே = தெய்வம், தலைவன்,

"பால்வரை தெய்வம் வினையே பூதம்" (தொல். 541)

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை" (ஷை 964).

"தெய்வம் அஞ்சல் புரையிறந் தெளிதல்" (ஷை 1218)

"வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப" (ஷை 1367).

யகர வொற்றுள்ள தெய்வப் பெயரே பெரும்பான்மையாகவும்,

"தேவர்ப் பரா அய முன்னிலைக் கண்ணே" (ஷை 1395)

என வகரவொற்றுள்ள பின்னைவடிவு அருகியும், இதுபோதுள்ள தமிழ்நூல்களுள் முந்தியதாகிய தொல்காப்பியத்துள் வருதல் காண்க.

சமற்கிருதம்—deva, daiva

இலத்தீன்—deus = god.

கிரேக்கம் (Greek) – theos = god,

'தேவ' என்னும் சொற்குச் சமற்கிருதத்திற் காட்டப்படும் div (to be bright), di, dip (to shine) என்னும் வேர்ச்சொற்கள் முதற்பொருளன்றி வழிப்பொருளே கொண்டுள்ளமையின் பொருந்தாமை காண்க.

பின்வரும் சித்திய (Scythian) ஆரியச் சொற்கள், 'தீ' (நெருப்பு) என்னும் தமிழ்ச்சொற்கு இனமானவை எனக் கால்டுவெல் கண்காணியர் காட்டுவர்.

சித்தியம்:

சாமாயிதே (samoiede) – tu, tui, ti, ty.

மஞ்சு (Manchu) – tua.

அங்கேரியம் (Hungarian)–tuz

ஒசுத்தியக்கு (Ostiak) – tut.

துங்கசு (Tungus)–togo.

இலசுக்கியம் (Lesghian)–tze, zi, zie.

ஆரியம்.

கேலிக்கம் (Gaelic) – teire
வேலிசு (Welsh) – tan
பாரசீகம் (Persian) – tigh

II நேயன்

நள்: நள் - நண் - நண்பு – நட்பு.

நள்ளுதல் = அடைதல், பொருந்துதல், நட்புக்கொள்ளுதல், செறிதல்.

நள்ளார் = பகைவர்.
நள்ளி = உறவு (சூடா).
நள்ளிருள் = செறிந்தவிருள் (திருக்கோ. 156, சிலப். 15, 105)

நள்ளுநர் = நண்பர் (திவா).
நள் – நளி. நளிதல் = செறிதல்.
நள் – நெள் - நெய் = ஒட்டும் நீர்ப்பொருள் (oil, ghee) கருப்புக்கட்டிச் சாந்து.
நெய்தல் = இணைத்தல், நூலை இணைத்து ஆடையாகச் செய்தல்.

நெய் = குருதி. நெய்த்தோர் (நெய்த்துவர்?) = குருதி.

அகரம் எகரமாதலை, பரு—பெரு, சத்தான்—செத்தான் என்னும் திரிபுகளிற் காண்க.

ளகரமெய்யீறு யகரமெய்யீறுவதை, கொள் - கொய், தொள் – தொய், பொள் - பொய் முதலிய திரிபுகளிற் காண்க.

நெய் - (நெய்ஞ்சு) - நெஞ்சு - நெஞ்சம் = விலாவெலும்புகள் இணைக்கப்பட்ட இடம் அல்லது அன்பிற்கிடமாகக் கருதப் படும் நெஞ்சாங்குலை (Heart) உள்ள இடம்.

நெய் - நேய் – நேயம் = அன்பு.

ஈரம், பசை முதலிய சொற்கள் ஒட்டும் பொருளையும் அன்பையும் குறித்தல் காண்க. அன்பு, இருவரை அல்லது பலரை இணைப்பது.

நேய் - நே = அன்பு. நேயம் - நேசம்.

ய – ச. ஒப்புநோக்க: நெயவு – நெசவு.

நேசம்–நேசி. நேசித்தல் = அன்பு காட்டுதல், விரும்புதல்.

"நேசித்து ரசவாத வித்தைக்கலைந்திடுவர்" (தாயுமானவர்)

நேயம் – நேயன். நேசம் – நேசன்.

(தொடர்ச்சி 17-ஆம் பக்கம் பார்க்க)

சொற்சிறப்பு.

(முத்தமிழ்க்காவலர். கி. ஆ. பெ. விசுவநாதம்)

உலகில் முதன்முதல் மக்கள் பிறந்த நாடு தமிழ்நாடு. அவர் முதன்முதலில் வாய்திறந்து பேசியமொழி தமிழ்மொழி. அது நமதுமொழி.

இவ்வுலகில் தோன்றி மறைந்த மொழிகள் பல. இன்றிருப்பன ஏறக்குறைய இரண்டாயிரமாகும். இவற்றுள் வேறு எந்த மொழிக்கும் இல்லாத சிறப்புக்கள் பலவற்றைத் தமிழ்மொழி ஒன்று மட்டுமே பெற்றிருக்கிறது. அவை தொன்மைச்சிறப்பு, தனிமைச்சிறப்பு, இனிமைச்சிறப்பு; இளமைச்சிறப்பு, எளிமைச் சிறப்பு, ஒலிச்சிறப்பு, உருபுச்சிறப்பு, தொடர்சிறப்பு, பண்புச் சிறப்பு, எழுத்துச்சிறப்பு, சொற்சிறப்பு, பொருட்சிறப்பு, பாட்டுச்சிறப்பு, உவமைச்சிறப்பு, இலக்கியச்சிறப்பு, இலக்கணச் சிறப்பு என பதினாறு.

இவற்றுள் சொற்சிறப்பு என்பது தமிழில் ஒரு தனித்தன்மை வாய்ந்தது. இச்சிறப்பைப் பிறமொழிகளிற் காண இயலாது. அம்மொழிகளில் சொற்கள் பல எழுத்துக்களைக் கொண்டு நீண்டு காணப்படும். தமிழில் உள்ள சொற்களிற் சில 7 எழுத்துக்களைக் கொண்டவை. பல ஐந்து எழுத்துக்களைக் கொண்டவை. 4, 3, 2. எழுத்துக்களைக் கொண்ட சொற்களே மிகை. ஒரு எழுத்துச்சொற்களும் இராமலில. இதனை ஓரெழுத்து ஒருசொல் எனவும் கூறுவதுண்டு. அடியில் வருவனவற்றைக் காண்க.

ஆ.	பசு.	ஈ.	ஒரு உயிர்.
கோ.	மன்னன்.	கை.	ஒரு உறுப்பு.
தா.	கொடு.	தீ.	நெருப்பு.
தை.	மாதம்.	நா.	நாக்கு.
பை.	சாக்கு.	பூ.	மலர்.
போ.	போக்குதல்.	வா.	வரவேற்றல்.
மை.	கண்ணின் மை	வை.	வைக்கச்செய்தல்.

இவையே ஓரெழுத்து ஒருசொல் என்பன.

தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை 247.

தனித் தமிழ்ச் சொற்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 90,000. இவை எழுத்தின் பெருக்கத்தையும், சொல்லின் பெருக்கத்தையும், தமிழின் வளத்தையும் ஒருங்கே காட்டுவனவாம்.

பிறமொழிச் சொற்கள் உருவத்தை மட்டுமே காட்டக் கூடியன. தமிழ்மொழிச் சொற்கள் உருவத்தையும், பருவத்தையும் சேர்த்துக் காட்டக்கூடியன.

"பெண்" என்பதற்கு ஆங்கிலேயர் "உமன்" என்பர். வடமொழியினர் "ஸ்திரீ" என்பர். இவை இரண்டும் உருவத்தை மட்டுமே காட்டுகின்றன. பருவத்தைக்காட்டுவதாக இல்லை. காட்டவேண்டுமானால் "யங்" "ஓல்டு" என்பதையும், "பால்ய" "வயோதிக" என்பதையும் சேர்த்துக் கூறியாக வேண்டும். இவை அம்மொழிகளிலுள்ள சொல்வளத்தைக் காட்டுவனவாயில. தமிழில் உள்ள சொற்கள் உருவத்தையும் அதன் பருவத்தையும் காட்டுவதைக் கண்டு மகிழுங்கள்.

சொல்.	**உருவம்.**	**பருவம்.**
பேதை.	பெண்.	5. வயதுக்கும் கீழ்.
பெதும்பை.	பெண்.	10. வயதுக்கும் கீழ்.
மங்கை	பெண்.	16. வயதுக்கும் கீழ்.
மடந்தை	பெண்.	25. வயதுக்கும் கீழ்.
அரிவை.	பெண்.	30. வயதுக்கும் கீழ்.
தெரிவை.	பெண்.	35. வயதுக்கும் கீழ்.
பேரிளம்பெண்.	பெண்.	45. வயதுக்கும் கீழ்.
மூதாட்டி.	பெண்.	60. வயதுக்கும் கீழ்,
கிழவி.	பெண்.	அதற்கு மேல்.

பெண் என்ன? ஆண் என்பதைத்தான் பாருங்கள்.

பிள்ளை.	ஆண்.	குழந்தைப்பருவம்.
சிறுவன்.	ஆண்,	விளையாட்டுப்பருவம்.
பையன்,	ஆண்.	பள்ளிப் பருவம்.
காளை.	ஆண்.	காதற் பருவம்.
தலைவன்.	ஆண்.	குடும்பப்பருவம்.

முதியோர்.	ஆண்.	தளர்ச்சிப் பருவம்.
கிழவன்.	ஆண்.	இறுதிப் பருவம்.

இவை அனைத்திற்கும் "மேல்" எனும் ஆங்கிலச் சொல்லோ "புருஷன்" எனும் வடமொழிச்சொல்லோ பொருந்துமா? என எண்ணிப்பாருங்கள். இவை அம்மொழிகளில் சொற்பஞ்சத்தையே காட்டுகின்றன.

ஆண், பெண் மட்டுமல்ல. 'பூ" என்பதை எடுத்துக் கொள்ளுங்கள். "புளவர்" என்பர் ஆங்கிலேயர். "புஷ்பம்" என்பர் வடமொழியினர். அவ்வளவுதான். உருவத்தையும், பருவத்தையும் காட்ட அவரிடம் சொற்களில. தமிழிற் பாருங்கள்.

அரும்பு.	பூ.	அரும்பும் பருவம்.
மொட்டு.	பூ.	மொக்குவிடும் பருவம்.
முகை.	பூ.	முகிழ்க்கும் பருவம்.
மலர்.	பூ.	மலரும் பருவம்.
அலர்.	பூ.	மலர்ந்த பருவம்.
வீ.	பூ.	வாடும் பருவம்.
செம்மல்.	பூ.	வதங்கும் பருவம்.

எப்படி தமிழில் உள்ள சொல் வளம்? பூவை விட்டு இலையைத்தான் எடுங்கள். வடமொழியினர் இதை "பத்திரம்" என்பர். ஆங்கிலேயர் "லீப்" என்பர். அச்சொற்கள் "இலை" என்ற உருவத்தையே காட்டுகின்றன. அதன் பருவத்தைக் காட்டவில்லை. தமிழ்ச்சொற்களோ உருவத்தையும் குறித்து, பருவத்தையும் காட்டி, இன்னும் ஒருபடிதாண்டி அதன் வண்ணத்தையும் கூட நினைவூட்டி மகிழ்விக்கின்றன.

சொற்கள்.	உருவம்.	பருவமும், வண்ணமும்.
கொழுந்து.	இலை.	குழந்தைப் பருவம். சாம்பல் வண்ணம்.

தளிர்.	இலை.	இளமைப் பருவம். புளியங்கொட்டை வண்ணம்.
இலை.	இலை.	நடுப் பருவம். பச்சை வண்ணம்.
பழுப்பு.	இலை.	முதுமைப் பருவம். மஞ்சள் வண்ணம்,
சருகு.	இலை.	கிழட்டுப் பருவம், சிவப்பு வண்ணம்.

தமிழில் உள்ள இச்சொற்கள் உருவம், பருவம், வண்ணம் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டுதலைக் கண்டுகளியுங்கள்.

Gem என்று எழுதி அதையே ஜெம் என்றும், கெம் என்றும் படிப்பர். (Talk) டால்க் என்று எழுதி டாக் என்றும், (Walk) வால்க் என்று எழுதி வாக் என்றும் படிப்பர். Station (ஸ்டேடியன்) என்று எழுதி அதை ஸ்டேசன் எனச் சொல்லச் சொல்லுவர். San என்றும் Son என்றும் Sun என்றும் எழுதி அவை அனைத்தையுமே "சன்" எனப் படிக்கச் சொல்லுவர். இத்தகைய சொற்கொலைகள் தமிழில் இல.

அரிசியைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் "ரைஸ்"(Rice). சோற்றைக் குறிக்கும் சொல்லும் "ரைஸ்" தான். இது ஆங்கில மொழியில் சொற் பஞ்சத்தைக் காட்டுகிறது. இதனால் அரிசி கேட்பவர்களுக்குச் சோறும், சோறு கேட்பவர்களுக்கு அரிசியும் கிடைத்துவிடலாம். உணவு விடுதிகள் பலவற்றில் "சோறு" எனக்கூறி வேகாத அரிசியையே படைக்கின்றனர். வயிறெரிந்த மக்கள் இது என்ன வென்று கேட்டால் "ரைஸ்" என்கின்றனர். இதை யாரால் மறுக்கமுடியும்? இத்துன்பங்கள் தமிழ்ச்சொற்களால் வருவனவல்ல.

தமிழ்மொழியில் பல பொருள் குறிக்கும் ஒருசொல் என்றும், ஒருபொருள் குறிக்கும் பல சொல் என்றும் உண்டு. "மா" என்பது ஒரு சொல். அது பல பொருள்களைக்குறிக்கும். அவை அழகு, அளவு, அறிவு, ஆவி, இடித்த மா, இடை கட்டு, கறுப்பு, ஒரு மரம், குதிரை, சீலை, செல்வம், தாய், நஞ்சுக்கொடி, நிறம், பரி, பெருமை, மேன்மை, வண்டு, வயல் வலி, விலங்கு முதலியன.

அடுத்து ஒரு பொருள் குறிக்கும் பல சொல்லாவன. வேழம், களிறு, கறி, கைமா, நடைமலை, கைமலை, கறையடி, ஒருத்தல், அறுகு, ஆம்பல், நந்தி, தும்பி, துங்கல் என்ற இவை அனைத்தும் "யானை" என்ற ஒன்றையே குறிப்பன. இவை தமிழின் சொல்வளத்தைக் காட்டுவனவாம்.

"ராம ஜெயம்" என்பது வடமொழியிலுள்ள இருசொற்களைக்கொண்ட ஒரு சொற்றொடர். இதன் பொருள் என்ன? இது வேற்றுமை உருபு அற்றது ஆதலின் பொருளை விளக்காது நிற்கிறது. தமிழில் வேற்றுமை உருபு கலப்பதால் அது பொருளை நன்கு விளக்குகிறது.

இராமனை வெற்றி.	இராமனால் வெற்றி
இராமனுக்கு வெற்றி,	இராமனின் வெற்றி
இராமனது வெற்றி,	இராமனிடத்தில் வெற்றி,
இராமனே வெற்றி.	என்று தமிழிற் கூறலாம்.

"ராம ஜெயம்" என்பது இதில் எதைக் குறிக்கிறது?

தமிழில் உள்ள சொல்வளத்தையும், பிறமொழிகளிலுள்ள சொற்பஞ்சத்தையும் காட்ட இது ஒன்றே போதுமானது.

"தமிழ் வளம்பெற்ற ஒரு மொழி. அதன் சொற்சிறப்பு ஒரு தனிச்சிறப்பு. அது என் தாய்மொழி என்பதற்காக நான் பெருமையடைகிறேன்." என்று கூற ஒவ்வொரு தமிழனுக்கும் உரிமையுண்டு. அவ்வாறு நெஞ்சு நிமிர்ந்து நின்று கூறும் தகுதியும், உரிமையுமுடையவன் தமிழன் ஒருவனே.

"எங்கள் தமிழ்
வானம் அளந்த தனைத்தும் அளந்த தமிழ்.
எங்கள் தமிழ்
வானம் அறிந்த தனைத்தும் அறிந்த தமிழ்.
எங்கள் தமிழ்மொழி, எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே. அது
எங்கும் பரவிச் சுடரொளி வீசி
எழிலுடன் வாழியவே"

என்று வாய்திறந்து கூறுங்கள்.

வாழட்டும் தமிழ்மொழி.
வளரட்டும் தமிழ்ச்சிறப்பு.

தாயுரை.

— துரை. மாணிக்கம் —

உன்னைப் பெற்ற தாயுனக் கிதனை
உரைக்கின்றேன் அடா, மகனே — இது
முன்னை கொடுத்த செல்வங் களிலும்
மூத்தது கேள் அடா, மகனே!

உண்ணக் கொடுத்த பாலிலுஞ் சோற்றிலும்
ஊட்டிக் கொடுத்த தமிழை — உளம்
எண்ணக் கடுத்த வகைபோல்—அதனின்
எழிலைக் கெடுத்தனர் அட டா!

மண்ணைப் படுத்தினர் அடிமை! தமிழின்
மாந்தரைத் தடுத்தனர் உயர்வில் — நம்
கண்ணைக் கெடுத்தனர் எனினும் உய்வோம்;
கருத்தைக் கெடுத்தனர் அட டா!

பண்ணைக் கொடுத்த யாழை இசைக்கையில்
பறையை எடுத்தனர் முழக்க—தேன்
உண்ணக் கொடுத்த கையினால் நஞ்சை
ஊட்டத் துணிந்தனர் அட டா!

தூங்கப் படுத்தனர் தமிழர்! இனியவர்
துயில்நீங் கிடுதல் கடினம்—உயிர்
வாங்கப் புறப்படு மகனே! உறையின்
வாளைக் கையினில் எடடா!

தாயைக் காத்திடு முன்னம், ஆன்றோர்
தமிழைக் காத்திடற் கெழுவாய்—ஒரு
பேயை அரியணை வைத்தார் அவர்தம்
பிழையைப் போற்றிடில் கெடுவாய்!

(10-ஆம் பக்கத்தொடர்ச்சி)

நேயம் என்னும் தென்சொல் வடநாட்டுத் திரவிடத்தில் வழங்கி, பின்னர்ப் பிராகிருதத்திலும் தொடர்ந்து, இறுதியில் சமற்கிருதத்திற்புகுந்து 'ஸ்நேஹ' என்று வழங்குகின்றது. இவ்வரலாற்றுமுறை அறியாதார், பேரன் பாட்டனைப் பெற்றான் என்பதுபோல், ஸ்நேஹ (சமற்)—நேயம் (பிராகிருதம்)–நேயம் (தமிழ்) எனத் தலை கீழாய்த்திரிப்பர். இங்ஙனமே சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியிலும்,உண்மைக்கு மாறாகக் காட்டப்பட்டுள்ளது. பகுத்தறிவும் நடுவுநிலையையுமுள்ள அறிஞர் உண்மை கண்டு கொள்வாராக. நேயம் வடசொல்லாயின் 'நெய்' என்பதும் அதன் அடிவேரான 'நள்' என்பதும் வட சொல்லாதல் வேண்டும். அங்ஙனமாகாமை வெள்ளிடைமலை போல் தெள்ளிதே.

வடமொழி ஆயிரக்கணக்கான தென்சொற்களைக் கடன் கொண்டிருப்பதால், மொழிநூன்முறைப்படி நடுவுநிலையாய் ஆராய்ந்து உண்மை காணவேண்டுமேயன்றி, வடமொழி தேவ மொழியாதலால் பிறமொழியினின்று கடன்கொள்ளாதென்னும் கருநாடகக் குருட்டுக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, தூய தென்சொற்களையும் வடசொல்லென வலிப்பது, அறிவாராய்ச்சிமிக்க இக்காலத்திற் கேற்காதென, வடமொழி வாணர் திடமாக அறிவாராக. ஆராய்ச்சியில்லாத தமிழ்ப் பேராசிரியரும், வடமொழியிலுள்ள சொல்லெல்லாம் வடசொல் லெனக் கருதும் பேதைமையை விட்டுய்வாராக. மயிர் என்னும் தென்சொல் 'ச்மச்ரு' (Smasru) எனச் சகரம் முதற்கொண்டு வழங்குவதுபோன்றே, நேயம் என்னும் தென்சொல்லும் 'ஸ்நேஹ' என ஸ்கரம் முற்கொண்டு சமற்கிருதத்தில் வழங்கு கின்றதென அறிக.



சிறுகதையல்ல; பெருங்கதையுமல்ல.

—[தாளாளன்]—

'தூங்கிவிட்டீரா?' என்ருள் என்மனைவி. நள்ளிரவு. வெளியே மழை பிசுபிசுத்தது. மணிப்பொறியைப் பார்த்தேன். மணி இரண்டு அடிக்க சில நொடிகள் இருந்தன. எனக்கும் தூக்கம் வரவில்லை. அவளும் தூங்கவில்லை போலிருக்கிறது என்று எண்ணி, 'என்ன வேண்டும், என்றேன்.

'ஒன்றும் உங்களிடமிருந்து இப்பொழுது வேண்டாம். நான் ஒன்று சொல்லலாமா?' என்ருள்.

'என்ன சொல்வாய்! ஊருக்குப் போகிறேன். நாளை என்னை அனுப்பிவிடுங்கள். அம்மா வரச்சொல்லி பாட்டாகப் பாடுகிருள் என்று பாடுவாய்' என்று படுத்துக்கொண்டே சொன்னேன்.

அறைவிளக்கு மெதுவாக எரிந்துகொண்டிருந்தது. விடியலில் ஒளிரும் வெள்ளிக்கோளின் மங்கிய ஒளிபோல் அறையில் ஒளி தவழ்ந்தது. எனக்கு நான்கைந்தடி தள்ளி அவள் கட்டில் இருந்தது. குழந்தைகள் உள்ளறையில் உறங்கின.

நான் இதைச் சொன்னவுடன் அவளிடமிருந்து விடையே வரவில்லை. என் எண்ணம் சரியாகப் போய்விட்டதென்ற மகிழ்வுடன், நான் அசையாமற் கிடந்தேன். ஆனல் பிறகு அவள் பேசவேயில்லை. மணி இரண்டு அடித்தது. தூங்கி விட்டாளோ என்று கருதி அவள் பக்கம் திரும்பினேன். என்ன வியப்பு! அவள் என் அருகில் அசையாத சிற்பமாய் நின்றுகொண்டிருந்தாள். அவிழ்ந்து கலைந்த குழல் என் முகத்தில் நெளிந்தது. உடனே எழுந்து உட்கார்ந்து கொண்டு அவள் கையைப்பற்றி, என் கட்டிலில் அமரவைத்தேன். கொடியெனத் துவண்டு உட்கார்ந்தாள். அவள் முகத்தைப் பார்த்தேன். கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. திடுக்கிட்டுப்போனேன். அவள் உள்ளத்தை நான் அறியாவிடினும், அவள் கண்ணீரைப்பற்றி நான் நன்கு அறிந்தவன். அவள் கண்ணீர் விடுவதற்கு இரண்டு காரணங்கள்தாம் உண்டு. ஒன்று நான் ஏதாவது அறியாமல் பிழைசெய்தால் அவள் கண்ணீர்வடித்து, அதை அன்பால் கடிவாள். இரண்டு அவள் ஏதாவது அறியாமல் பிழைசெய்துவிட்டால், அதற்காக வருந்திக் கண்ணீரொடு என்னிடம் உரைப்பாள்.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளில் ஏதேனும் ஒன்று நடந்துவிட்டது போலும் என்று திண்ணமாக நம்பினேன். என்னைப் பொறுத்த வரையிலும், நான் எதுவும் அப்படிச்செய்துவிட்டதாக நினைவில்லை. அவளைப் பொறுத்தவரையில்,..... ......ஏதாவது.........

"என்னத்திற்காக வருந்துகின்றாய்" என்று செல்லமாக அவள் கண்ணீரைத் துடைத்தேன்.

"நீங்கள் மிகவும் நல்லவர்......... வெள்ளை உள்ளம் படைத்தவர்........." என்று மீண்டும் வருந்தினாள். எனக்குச் சிரிப்புப் பொத்துக்கொண்டு வந்தது.

"நான் நல்லவன் என்பதற்கு நீ கூத்தல்லவோ ஆட வேண்டும். அதற்காக அழுவதால் நான் நல்லவனாக இருக்கக் கூடாதென்ற எண்ணமோ?" என்றேன்.

"நான் ஊருக்குப் போக விரும்பவில்லை" என்றாள்.

'மிகவும் நல்லதாய்ப் போயிற்று, ஆனால் அதற்குப் பதிலாக அம்மாவையே இங்கு வரவழைக்க எண்ணுகின்றாயோ?' என்றேன்.

"விளையாட்டு வேண்டாம். நான் கொடுமையான ஒரு செய்திபற்றிப் பேசவந்தேன். நீங்கள் அதுபற்றித் துளியும் எண்ணாமல், நல்லவற்றையே எண்ணிக்கொண்டிருக்கிறீர்களே, இந்நிலையில் அதை எவ்வாறு சொல்வது என்று வருந்துகின்றேன்" என்று சொன்னாள். எனக்கு உண்மையிலேயே உள்ளம் துணுக்குற்றது. என் வாழ்வில் நடக்காதது நடந்துவிட்டது போல் கருதி இடிந்துபோனேன். எதைப்பற்றியும் என் மூளை நினைக்கவில்லை. அவள் எழுந்தாள். நான் தடுத்து, "சொல்லாமல் போகாதே" என்றேன். "வருகின்றேன் விடுங்கள்" என்று சென்றவள், மங்கி எரிந்துகொண்டிருந்த படுக்கையறை விளக்கை எடுத்துக்கொண்டுவந்து தூண்டிவிட்டாள். பானை நீரில் ஒரு உப்புக்கல்லைக் கரைத்ததுபோல், அடர்த்த இருளில், அந்தச் சிறு விளக்கு ஒளியிட முடியவில்லை. விளக்கை என்னிடம் கொடுத்த படி, ஒரு சிறு தாளையும் இடுப்பிலிருந்து எடுத்துக்கொடுத்தாள். தாள் ஈரமாக இருந்ததோடு, சுருங்கியும் இருந்தது. அதைப் பிரித்தேன். கோணல்மாணலான எழுத்துக்களில் அதில் ஏதோ எழுதி இருந்தது.

"படியுங்கள் இதை" என்றாள் மனைவி.

அந்த மின்மினி விளக்கில் அதைப்படித்தேன். அதில் இவ்வாறு எழுதியிருந்தது.

"நீ என்னை மறந்துவிடு. உன்னிடம் வரம்புமீறி ஏதாவது நடந்திருப்பின் மன்னித்துவிடு. நான் நாளை சென்னைக்குப் போகின்றேன். இது என் கடைசிக் கடிதம்.

— பொய்யாமொழி"

"என்ன இது...... யாரெழுதியது...... யாருக்கு" என்றேன்.

"உம்...... மெதுவாகப் பேசுங்கள். நான் இதை எப்படி உங்களிடம் சொல்வேன்? எதுவானாலும் என்னை மன்னித்து விடுங்கள். எதையும் முழுதாக ஆய்ந்து முடிவு செய்யுங்கள். இது வன்றி வேறு எந்தவகையிலும் விரைந்து நடக்கமாட்டேன்' என்று உறுதிகொடுங்கள்" என்றாள் என் இரண்டு கைகளையும் ஒருங்கே பிடித்தபடி.

என் மூளை குழம்பியது. நான் எங்கிருக்கின்றேன் என்று ஒருமுறை பார்த்துக்கொண்டேன். வெளியில் ஒரு ஆந்தை அலறிக்கொண்டு, வீட்டுக் கூரையைத் தாண்டிச்சென்றது. அதற்கு ஒன்றும் பொருளில்லை என்றாலும், எனக்கு அக்கூவல் அச்சத்தைக் கொடுத்தது.

"என்ன குழலி! உளறுகின்றாய்! செய்தியைச்சொல்" என்றேன் கடுமையாகவே!

அவள் என் கால்களைக் கட்டிக்கொண்டு கெஞ்சினாள்.

"வேண்டாம் சினங்கொள்ளாதீர். உணர்வு தலைப்பட வேண்டாம். வீணாக பெருந்தொல்லைகள் வரும். முன்னறிவோடு நடந்துகொள்வோம்...... வாக்குக்கொடுங்கள்" என்று தேம்பியழுதாள்.

"என்ன......" கடுமையாக என் சொற்கள் சுவர்களில் எதிரொலித்தன.

"மெதுவாகப் பேசுங்கள்"..... பக்கத்து வீடுகளில் படாமல் செய்தியைக் காத்துவைத்துள்ளேன்" என்று கைகூப்பினாள்.

என்ன செய்வதென்று அறியாமலும், நடந்தது என்ன என்பதை அறிந்துகொள்ளவும் துடிதுடித்தது நெஞ்சம்.

"என்னை மன்னித்துவிடுங்கள். இவ்வொருமுறை மட்டும் என் சொற்படி நடப்பதாக வாக்குக்கொடுங்கள். நான் சொல்கின்றேன்......" என்று அழாக்குறையாகக் கெஞ்சினாள்.

வேறுவழியின்றி "அப்படியே செய்கின்றேன். செய்தியை விரைந்துசொல்" என்றேன்.

அவள் சொல்லத் தயங்கித் தயங்கி,

"இக்கடிதம், நம் கயற்கண்ணிக்கு அவளோடு கல்லூரியில் படிக்கும் பொய்யாமொழி..."

இவைதாம் என் செவிகளில் விழுந்தன.

"ஐயோ கயற்கண்ணி......" என்று அலறிக் குழலியின் மடிமீது வீழ்ந்தேன். பிறகு நான் என்னசெய்தேன் என்பது எனக்கே தெரியாது.

○ ○ ○

நான் கண்விழிக்கையில் என் பார்வையில் முதலிற் பட்டவள், என்காலடியில் தலைவிரிகோலமாய்த் துவண்டுகிடந்த கயற்கண்ணிதான். என் முகத்தைப் பார்த்ததும் அவள்,

"ஐயோ அப்பா, என்னை மன்னித்துவிடுங்கள் அப்பா... மன்னித்துவிடுங்கள்...... அப்பா......" என்று அழுதாள். அவள் நெற்றி என் பெருவிரலைச் சுட்டது. அவள் கண்ணீர் படுத்துக்கிடந்த என் காலடிகளை நனைத்தது. கண்களை நாற்புறமும் சுழற்றினேன். வலக்கைப்புறம் என் மகன் மொழிக்கரசன் நின்றுகொண்டிருந்தான். அவன் பின் என் இளைய மகள் நற்சோணை நின்றாள். இடக்கைப்புறம் என் மனைவி குழலி அழுத கண்களோடு என்னை நோக்கியவாறும் மண்டியிட்டுத் தலையைக் கட்டிலிற் சாய்த்தவாறும், துயரமே உருவாய் இருந்தாள். என் கால் மருங்கில் என் மூத்தமகள் கயற்கண்ணி இருந்து ஓயாமல் தேம்பினாள். அவள் படுந்துயரைவிட என் மனைவி படுந்துயரமே எனக்கு மிகையாகப் பட்டது. மெதுவாக என் மனைவியின் தலையை நீவினேன். "குழலி...... உன் பெண் உனக்குப் பெருமை தருவாள்...... என்று பலமுறை என்னிடம் கூறி மகிழ்ந்தாயே...... இப்படியா நடக்கவேண்டும்... ..." என்று தயங்கித் தயங்கிக் கூறிமுடித்தேன். கயற்கண்ணியின் ஓலம் பெருகியது. அவள் மெல்லிய தோள்கள் குலுங்கின. அவள் முகம் நெருப்பாய்க் கனன்றது. அவள் தேம்பல் என் செவிகளை மட்டுமன்றி என் நெஞ்சகத்தையும்

சுட்டது. அசைவற்று அப்படியே கட்டிலிற் படுத்துக்கிடந்தேன். குக்கலும் குமுறலுமாக கயற்கண்ணி அழுதுகொண்டிருந்தாள். அவளை எதுவுங்கேட்க நான் விரும்பவில்லை. எதைக்கேட்பது? என்னவென்று கேட்பது? ஒரே எண்ணக் குழப்பம்.

காலை மணி எட்டு அடித்தது.

அருகில் நின்றுகொண்டிருந்த என் சிறியபெண் நற்சோணை, எட்டு ஆண்டுகளைத் தாண்டியிருந்தாள் என்பது நினைவில் வந்து மொய்த்தது. இப்பொழுது கயற்கண்ணிக்குச் சரியாக 15 ஆண்டுகள் முடிந்திருந்தன. அதற்குள் அவள் செய்த செயல்......! என்னை வெட்டிப் புதைக்கவந்தாலும் மகிழ்வோடு தலை கொடுப்பேன்...... அவள் எனக்குக் கூற்றினும் கொடியவளாகப்பட்டாள். என் மூத்த மகன் கல்லூரியில் பி. ஏ. படித்துக்கொண்டிருந்தான். கயற்கண்ணி இன்னும் இரண்டு ஆண்டு படித்தால் அவன் வகுப்பை எட்டுவாள்...... என் நிலை எனக்கே அருவருப்பாக இருந்தது

நின்றுகொண்டிருந்த இளையவள் நற்சோணை குழலியிடம் வந்து, "அம்மா பள்ளிக்கூடம் போகவேண்டாமா ?" என்றாள்.

"வேண்டாம்..." என்று நான் கத்தினேன்.

"பள்ளிக்கூடம் போய் போய்த்தான் உன் அக்காள்..." என்று என்னையறியாமல் தொடங்கினேன். "அத்தான்......" என் மனைவியின் ஓலம் காதைப்பிளந்தது.

"ஓ ஓ... பிள்ளைகளுக்கு எங்கள்நிலை தெரியாது" என்று அடங்கினேன். நான் மயங்கி விழுந்துகிடப்பதாக எண்ணியே என்மகன் மொழிக்கரசனும், நற்சோணையும் எண்ணிக்கொண்டிருப்பார் என்று நினைக்கின்றேன். என் மனைவி முன்னறிவோடு நடந்தது இதை எனக்கு உணர்த்திற்று.

"போய் அண்ணனும் நீயும் கடையில் இட்டலி உண்டுவிட்டுப் பள்ளிக்கூடம் போங்கள் அம்மா....." என்று நற்சோணையிடம் என் மனைவி கூறிவிட்டு, என் பெரிய பையனிடம் "அப்பா மொழிக்கரசு! பாப்பாவுக்கு உண்டிச்சாலையில் இட்டலி வாங்கிக்கொடுத்துவிட்டு. நீயும் உண்டபின் கல்லூரிக்குப் போய் வா. அப்பாவை நான் பார்த்துக்கொள்ளுகின்றேன்" என்று குழலி கூறினாள்.

"இல்லையம்மா! எனக்கு ஒன்றும் வேண்டாம்; நான் கல்லூரிக்குப்போக விரும்பவில்லை, அப்பாவின் நிலை எனக்கு அச்சத்தைத் தருகின்றது; நான் மருத்துவரைக் கூட்டிக் கொண்டு வருகிறேனே!"

வேண்டாம் என்று கையை ஆட்டினேன் என் பையனிடம். அவன் என் கையசைவுக்கும் மறுமொழி பேசாதவன். உடனே அவ்விடம்விட்டு, சிறியபெண் நற்சோணையின் கையைப்பற்றி அழைத்துக்கொண்டு போனான்.

கயற்கண்ணி என் முகத்தைப் பார்க்கவும் நடுங்கினாள்.

மூவரும் இருந்த நிலையிலேயே அரைமணிப் பொழுதைக் கழித்தோம், மொழிக்கரசனும், நற்சோணையும் வீட்டை விட்டுப் போனபின் சிறிதுநேரங்கழித்து மனைவி என் முகத்தைப் பார்த்தாள். பின்னர் என்னை நோக்கி......

தென்மொழி
பொங்கல் மலர்

மூவண்ண முகப்புடன்
பொங்கலன்று மலர்கின்றது.

தமிழர்தம் உயிரெனப் போற்றத்தகுந்த
அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும்,
இனிய முழுப்பாடல் ஒன்றும்,
இரு சிறந்த ஆங்கில மொழிபெயர்ப்புப் பாடல்களும்,
வரலாறுகளும், கருத்துக் கதைகளும்
நிறைந்து
இலக்கியக் கருவூலமாக
அழகிய வெள்ளைத்தாளில்
நூறு பக்கங்களுடன்
வெளிவரும்.
மற்றைய விளக்கங்கள் அடுத்த இதழில்.

"அப்படி ஒன்றும் தவறு நடந்துவிடவில்லை. கயற்கண்ணி அதைப்பொருத்தமட்டில் எச்சரிக்கையாகவே நடந்து கொண்டிருப்பதாகக் கூறினள். நீங்கள் ஒன்றும் அஞ்சவேண்டாம்" என்று என்னிடம் கூறிவிட்டுப் பெரிய மகளைப் பார்த்து, "நீ எழுந்துபோய் முகத்தைக் கழுவம்மா" என்ருள்.

"அப்படியே அகத்தையும் கழுவிக்கொள்" என்றேன், என் சினமடங்காமல்.

"பேசாமல் இருங்களேன்" என்று கண்ணுல் ஒரு பேச்சை அவிழ்த்தாள் குழலி.

கயற்கண்ணி காம்பொடிந்த மலராய் நெகிழ்ந்தாள். அவள் நெற்றி ஒளி மழுங்கிக்கிடந்தது. பொற்சிலையாகத் துலங்கிய அவள் உடல் அனல்பட்ட முல்லை இதழாகக் கருமையேறி இருந்தது. அவள் நடையில் பண்பெனும் மிடுக்குக் குறைந்து போய் இருந்தது. அவள் விழிகளில் சூழ்நிலைக்கு ஆட்பட்ட துயர நிலை, கருவளையமாய்ச் சுற்றிக்கிடந்தது. அவள் பெண்மை இருள் விழுங்கிய நிலவாய் ஒளிமழுங்கியது. என் மனைவிக்கு எப்படிப் பட்டனவோ! எனக்கு அவை அவ்வாறு காட்சியளித்தன.

அவள் நடக்கவில்லை. என் தூய்மையான உள்ளம் அவளை நெட்டித் தள்ளியது. அதன் வலிவான போக்கை அவளால் தடுக்கமுடியாமல் தள்ளாடினுள். என் மனைவியைப் பார்த்தேன். கண்களில் நீர்வடிய அவள் போவதைப்பார்த்துப் பெருமூச்சு விட்டாள்.

சிறிதுநேரஞ் சென்றபின் என் அருகில் நெருங்கினுள். பெண் என்ற உருவத்தைப்பார்க்கவும் மனம் பதறினேன்,

"என்ன தாழ்வேற்பட்டுவிட்டது? அவன் அவளிடம் இருமுறைகள் பேசியிருக்கின்ருனும், அதுவல்லாமல் மூன்று நான்கு கடிதங்கள் எழுதியிருக்கின்ருனும். இவள்மட்டும் ஒன்றே ஒன்று..... அதுவும் நேற்றுத்தான் எழுதினுளாம்" என்று விளக்கிச் சொன்னுள்.

பக்கத்து வீட்டில் இசைத்தட்டு ஒரு பாட்டின் ஒரே அடியைத் திருப்பித் திருப்பி இசைத்தது. ஒழுங்கு என்பதும் ஒரு இசைத்தட்டுப் போன்றதுதான். தட்டில் ஒரு சிறு கீரல் விழுங்

தாலும், அதை வைக்கும்போதெல்லாம் அந்த இடத்திற்கு வந்தவுடன் திருப்பித் திருப்பி அதையே பாடிக்காட்டும். நம் ஒழுங்கு வரலாற்றிலும், எங்கேனும் ஒரு கீரல் விழுந்துவிட்டாலும் எக்காலத்திற்கும் உள்ளம் அதையே திருப்பித்திருப்பிப் பாடிக்காட்டும். அந்த ஓசை, மற்றவர்க்குக் கேட்கின்றதோ இல்லையோ, அவரவர் உள்ளம் பாடுவதை ஒவ்வொருவரும் கேட்டுப் புழுங்கியே ஆகவேண்டும்.

"குழலி!" என்றேன்.

அவள் என்னையே வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"இனி நான் எப்படி வெளியே போவேன்?'

"என்ன இது? சிறுபிள்ளையாட்டம் மனங்குழைந்து விட்டீரே. உலகம் எங்கும் ஓட்டைகள்தாம்" என்றாள்.

"பேதைத்தனமாகப் பிதற்றாதே! கல்லுக்கும் முள்ளுக்கும் நான் அஞ்சவில்லை. சொல்லுக்கும் செயலுக்கும் நான் அஞ்சுகிறேன். ஒழுக்கங்கெட்டவர் போடும் ஓலத்தின் நடுவில் உயர்ந்த நெறி உடையவர் பேசும் சிறிய பேச்சும் என் உயிரைப் போக்கிவிடும்" என்று சொல்லிக்கொண்டே என் நெஞ்சைப் பிடித்துக்கொண்டேன்; என் நெஞ்சை ஏதோ அடைத்தது.

"அத்தான்......என்னைப் பாருங்கள் அத்தான். நீங்கள் இருந்தும் நடந்த இவ்விழிவிற்காகவே நான் அஞ்சுகின்றேன். எதுவும் எண்ணி உள்ளத்தை வருத்திக்கொள்ளாதீர். எனக்கொரு எண்ணம் தோன்றுகின்றது...... அதைக் கூறட்டுமா" என்றாள் என் மனைவி.

"உம்" என்று ஊங்கொட்டினேன்,

"அந்தப் பையனையே நாம் பார்த்துப் பேசி......" அவள் முடிக்கவில்லை. நான் தொடர்ந்தேன். "......அவன் காலில் விழுந்து, எங்கள் பெண்ணைக் கைவிட்டுவிடாதே அப்பா...... என்று கெஞ்சி... தூ...... உனக்கு மூளை சரியாக இல்லை...... போய் நீயும் முகத்தைக் கழுவிக்கொள்... அப்படியே அகத்தையும்......" —— என் வாயைப் பொத்தினாள் குழலி.

"என் உள்ளம் தூய்மையானது அத்தான். உங்கள் வாழ்வும், உங்கள் அன்பும் அங்குச் சுடர்விடுகின்றன. ஒரு

மாசுமருவின்றி உங்களுக்காக அதைக் காத்துவருகின்றேன். என்னை, என்று உங்களுக்கென ஆளாக்கிக்கொண்டேனே அன்றே என் உள்ளத்தை, எண்ணத்தை, அறிவை எல்லாம் உங்களுக்குரியனவாக்கி விட்டேன். நான் நினைப்பதில்லை; செய்வதில்லை; விரும்புவதில்லை. நீங்கள் நினைப்பது நான் நினைப்பது. உங்கள் செயல் என் செயல். உங்கள் விருப்பம் என்னுடையது. உங்கள் அறிவில் எனக்கு ஆழ்ந்த நம்பிக்கை... அதனால் என் அறிவுக்கு வேலையில்லை. ஆனால் இந்தமுறைமட்டும் பெண்ணாகிய என்னுடைய உள்ளத்தையும் கேட்டு, அதன்படி நடக்கவேண்டுகின்றேன். நான் கூறுவதைக் கேளுங்கள்......'' அவள் கெஞ்சினாள். மூன்று பெரிய பிள்ளைகளுக்குத் தாயாகப் படவில்லை; எனக்குக் குழந்தையாகப் பட்டாள். அவள் கடைவிழிகளில் நீர் மல்கிக் கிடந்தது. அவளைப் பேசவைத்துக் கேட்டுக்கொண்டே இருந்தேன். மறுகிழமை விடுமுறை போட்டுவிட்டுச் சென்னை போவதென முடிவுசெய்தேன்.

ஃ ஃ ஃ

விழுப்புரம் தாண்டியதும் ஒரே கூட்டம். திருச்சியிலிருந்து என்கூடவே ஒருவர் வந்தார். அவரும் ஏறத்தாழ நடுத்தர அகவையை அடைந்தவர். கையில் ஒரே தோற்பையை வைத்திருந்தார். அதன்மேல் 'நல்லதம்பி, மாவட்ட துணைத் தண்டலர்' என்றிருந்தது. அவர் பெயரை நான் கேட்டிருக்கின்றேன். அவரை இப்பொழுதுதான் பார்க்கின்றேன். அவருக்குத் திருச்சியில் நல்ல பெயர். தமிழ்ப்பற்று நிரம்பியவர் என்றும், திருக்குறள் சொற்பொழிவு செய்பவர் என்றுங் கூறக் கேள்விப் பட்டிருக்கின்றேன். அ வ ரே ா டு பேச எண்ணங்கொண்டு பேச்சைத் தொடங்கினேன்.

"எதுவரையில் போகின்றீர் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்று அவரிடம் கேட்டேன்.

"நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள். சென்னைவரையில் போய் உடனே திரும்பவேண்டும். உங்களைப் பார்த்தால் அப்பக்கந்தான் வருவீர் போலத் தெரிகின்றது...நான் எண்ணுவது சரிதானே...?'' என்று அவர் என்னை வினவினார்.

"மிகவும் சரிதான். உளவியல் கற்றிருப்பீர் அல்லவா? திருக்குறளையும் நன்றாகப் படித்திருக்கின்றீர் என்று அறிந்து மகிழ்

கின்றேன். தூய தமிழ்ப்பற்றுடையவன் என்ற முறையில் நன்றியும் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்" என்று அவரிடம் கூறினேன்.

"ஓஃகோ, மிக்க மகிழ்ச்சி அய்யா! நன்றாகப்போய்விட்டது. நல்ல வழித்துணை. திருக்குறள் என்றால் எனக்கு உயிர். அதிலும் ஒழுக்கம், வாய்மை என்று அவர் சொல்வதைப் படிக்கும்போது......" என்று கூறிக் கண்களை மூடிக்கொண்டு வள்ளுவரை வணங்குவார்ப்போல் மகிழ்வடைந்தார்.

எனக்குச் சுருக்கென்றது. என் மகள் கயற்கண்ணியின் தொய்மையான உடல் என் கண்முன் பட்டது. அடுத்து என் மனைவி குழலியின் அன்பு என்னை நிமிரச்செய்தது.

"என்ன ஐயா, பேசாமல் இருந்துவிட்டீர். இந்தக்காலத்தில் ஒழுக்கத்தையும், வாய்மையையும் பொருட்காட்சிகளிலும் பார்க்க முடியவில்லை. பாருங்களேன், கல்லூரி படிக்கின்ற பெண்கள் காதல் கடிதம் எழுதுகின்றனர் என்றால் என்ன சொல்ல இருக்கின்றது" என்று சுடச்சுடச் சொன்னார்.

என் உள்ளத்தில் யாரோ ஒரு பெரிய பாறையைத் தூக்கிப்போட்டனர்! என் காதுகள் அடைத்தன. கண்கள் இருண்டன. அவர் என்முன் சுழன்றார். புகைவண்டி ஊழி விரைவில் சுழன்றது.

வெளிநாடுகளில்

தென்மொழி விற்பனையாளர்.

சிங்கப்பூர், மலாயா, கொழும்புப் பகுதிகளில் உள்ள தமிழன்பர் பலரும் தென்மொழிபற்றிய விளக்கங்கள் கேட்டு எமக்கு முடங்கல்க்ள் வரைகின்றனர்.

கீழ்க்காணும் விற்பனையாளர் தம்மிடம் தென்மொழியைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ள அவரை வேண்டுகின்றோம்.

சிங்கப்பூர், மலாயா கூட்டரசுப் பகுதிகட்கு:
Dravida Nadu News Agencies,
Post Box No. 2025, SINGAPORE.

கொழும்புக்கு:
Pakutharivu Pannai,
Post Box No. 962, COLOMBO.

"என்ன ஐயா, கல்லாய்ச் சமைந்துவிட்டீரே. வேறு யாரைப்பற்றிச் சொல்ல என்ன இருக்கின்றது? என் வீட்டிலேயே நடந்த கதையைச் சொன்னேன்" என்று மீண்டும் சொன்னார்.

இதைக்கேட்டவுடன் எனக்குக் கொஞ்சம் உயிர் வந்தது. அவர் வீட்டிலும் நம் கயற்கண்ணிபோல ஒருத்தி இருக்க நாம் ஏன் வருந்தவேண்டும் என்று எண்ணி, நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

"நீங்கள் சொல்வது எல்லாம் மெய்யே"! என்றேன்.

"அப்படிச் சொல்லுங்கள். வேண்டுமானால் இதை நீங்கள் நம்பாதிருக்கலாம். இதைப் படித்துப் பாருங்கள்" என்று கூறி, அவர் தோற்பையைத் திறந்து ஒரு சிறு கடிதத்தை எடுத்து என் கையில் கொடுத்தார். அதில் எழுதியிருந்ததை விரைந்து படித்தேன்.

"பொய்யாமொழிக்கு !

போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை. உங்களை நம்பவில்லை. உங்கள் உள்ளத்தை நம்பினேன். அது பொய்க்குமானால் எதை நட்புவேன்?

— கயற்கண்ணி".

பெரிய குன்று என் தலைமீது சரிந்து விழுந்ததுபோல் இருந்தது. அவரைப் பார்த்தேன்.

கயற்கண்ணியைக் கவர்ந்த கள்வனின் தந்தையே என் முன்னிருந்தார். ஆனால் எனக்கிருந்த துயரம் அவர் முகத்தில் இல்லை. ஆணைப்பெற்றவர் அல்லவா?

"என்ன ஐயா, என் பெண் எழுதியதல்ல இக்கடிதம். எவரோபெற்ற ஒரு சிறந்த அறிவுள்ள பெண், என் அறிவற்ற பையன் பொய்க்கும் மொழியாகிய பொய்யாமொழிக்கு எழுதியிருக்கின்றாள். இவளை இவன் ஏமாற்றிவிட்டான்போல் தெரிகின்றது. அவனை இப்பொழுதுதான், எம். ஏ. படிக்க சென்னைக்கு அனுப்பிவைத்தேன். பையன் என்னிடம் சொல்லவேயில்லை. இந்தப்பெண் எழுதிய கடிதம் நீளாமல் சிறிய அளவில் அமைந்ததுகண்டு பெண் மிகவும் அடக்கமானவள் என்பதைக் கண்டுகொண்டேன். அவள் கையெழுத்து ஒழுங்காக இறுதிவரை எழுதப்பட்டிருப்பதால், அவள் பண்பும், ஒழுங்கும் உள்ளவள் என்று அறிந்தேன். அவள் எழுதிய ஒரே அடியால் ஆழ்ந்த கருத்தை உணர்த்தியிருப்பதால், அவள்

அறிவிற்சிறந்திலங்கவேண்டும் என்று கணித்தேன். 'உங்களை நம்பவில்லை' என்றதால் நல்ல அழுத்தமான திறமை உடைய வள் என்று முடிவு செய்தேன். பெண் அழகோ...இல்லையோ... அதுபற்றி எனக்குக் கவலையில்லை...... என்ன ஐயா, பார்க்கின் றீர். இந்தத் தகுதிகளைவிட எந்தத் தகுதிகள் சான்ற ஒரு பெண்ணை நான் என் மருமகளாக அடைவேன்? இந்தக் கடிதத்தைப் பையனிடம் காட்டி, திருமணத்திற்கு ஏற்பாடு செய்யவே சென்னை போகின்றேன்" என்றார்.

"ஐயா அவள் அழகிலும் சிறந்தவளே!" என்று கத்தி னேன். என் கண்களைக் கண்ணீர் மறைத்தது.

பிறகு என்ன நடந்தது என்று சொல்லவும் வேண்டுமா?

"ஐயா அந்தப் பேதைப் பெண் கயற்கண்ணியின் தந்தை நானே" என்று அவரிடம் கூற, அவரும் மனமுவந்து பொய்யாமொழிக்கும்—கயற்கண்ணிக்கும் திருமணத்தை முடித் தார்.

என்னைவிட, அந்த நல்லதம்பிப் பெரியவரைவிட, பொய்யாமொழியைவிட, கயற்கண்ணியைவிட, என் மனைவி குழலிதான் அத்திருமணத்தால் பேருவகை எய்தினள். குறள் கற்ற பெருமகன் தன் மகனையே பொய்யாமொழியாக்கினர். அவரை என் நெஞ்சு, இறக்கும்வரை மறவாது. "அத்தான் இத்தனைக்கும் யார் தெரியுமா காரணம்? நீங்கள்தான் அத்தான், நீங்கள்தான். உங்கள் நல்ல மனமே நம் மகளைக் காத்து, நம்மையும் காத்தது" என்று ஓயாமல் என்னைப் புகழ்கின்றாள் என்மனைவி.

❋ ❋

ஞாயிறு, திங்கள், செவ்வாய்!

(::)

(ச. சுப்பையா)

அல்லை ஒழிப்பதுவும் அவ்விருளில் தூவொளியால்
எல்லை யிலாவின்பம் ஈவதுவும் — சொல்லதனைத்
தூயநற் செந்தமிழிற் சொல்லுபவர் வாயதுவும்
ஞாயிறு திங்கள்செவ் வாய்!

பொருள்:—

இருளைப் போக்குவது பகலவன் (ஞாயிறு), அந்த இருட் டில் ஒளிதந்து எல்லை இலாவின்பம் தருவதுநிலவு (திங்கள்) தூய சொற்களைத் தூய்மையான செந்தமிழிற் சொல்பவர் வாயே செம்மையான வாய் (செவ்வாய்) என்பதாம்.

கருத்துக் கோவை.

உயிர்!

வினையே ஆடவர்க்கு உயிரே! வாள்நுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்!

—குறுந்தொகை

முயற்சி!

தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்கினியது இல்.

[தெள்ளிய நீர்ஊற்றிய வெறுங்கஞ்சி ஆயினும், (தன்னுடைய) நல்லமுயற்சியினால் வந்து சேர்ந்ததே உண்ணுதற்கு இனியது அதனைவிட இல்லை.]

—திருக்குறள்.

தண்ணுணர்வு!

விருப்பிலார் இல்லத்து வேறுஇருந்து உண்ணும்
வெருக்குக்கண் வெங்கருனை வேம்பாம் — விருப்புடைத்
தன்போல்வார் இல்லுள் தயங்குநீர்த் தண்புற்கை
என்போடு இயைந்த அமிழ்து.

(விருப்பம் கொள்ளாதவர், இல்லத்துத் தனிமையில் படைக்க இருந்து உண்ணுவது, வெருகு என்னும் பூனையினது சிறிய ஒளிபொருந்திய கண்போன்றதும், வெதுவெதுப்பாகப் பொரித்தெடுத்ததும் ஆன கறி என்னினும் அது வேம்பு ஆகும். விருப்பம் உள்ளவராகி தன்போன்று நட்பைச் செய்பவர் இல்லத்தின் தேங்கிய நீரின் குளிர்ந்த கஞ்சியாயினும் அதுவே எலும்புக்கும் இனியதான நல்லுணவாகும்.)

—நாலடியார்.

இரப்பு.

உண்கடன் வழிமொழிந்து இரக்குங்கால் முகமும், தாம்
கொண்டது கொடுக்குங் கால் முகமும், வேறுஆகுதல்
பண்டும் இவ் உலகத்து இயற்கை.

—கலித்தொகை.

வனப்பு.

இடை வனப்பும், தோள் வனப்பும், ஈடின் வனப்பும்
நடை வனப்பும் நாணின் வனப்பும் - புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல; எண்ணோடு
எழுத்தின் வனப்பே வனப்பு.

—ஏலாதி.

இளமை.

இளமைப் பருவமோ எச்செயலும் செய்யும்.
இளமை அறிவோ டியைந்தால் - விளைவதெல்லாம்
நாட்டுக்கு நன்றேயாம் —பாரதிதாசன்.

முனிவு !

முனிவினும் நல்குவர் மூதறிஞர்; உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர். —நன்னெறி.

அரசு நெறி.

எங்கள் இனையர் எனக்கருதின் ஏதமால்;
தங்கண்ண ரானும் தகவில கண்டக்கால்,
வன்கண்ணன் ஆகி ஒறுக்க, ஒறுக்கல்லா
மென்கண்ணன் ஆளான், அரசு!

(ஏதம்—குற்றம்; தகவில—நெறியல்லாதன, —ஒறுப்பு—தண்டம்.) —பழமொழி.

இரவாமை.

வறுமையால் ஈதல் இசையாது எனினும், இரவாமை
ஈதல் இரட்டி யுறும்.

(இசையாது—இயலாது.) —நாலடியார்.

கற்பு.

உயிரினும் சிறந்தன் று நாணே; நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன் று.

(சிறந்தன்று—சிறந்தது செயிர்தீர்—குற்றமற்ற.)
—தொல்காப்பியம்.

தென்மொழி

(இலக்கியத் திங்கள் ஈரிதழ்)

உள்நாடு (இந்தியா, இலங்கை)

ஆண்டுக்கட்டணம் உருபா 6–00
அரையாண்டுக் கட்டணம் ,, 3–00
தனியிதழ் 0–25.

வெளிநாடு (பர்மா, மலேயா)

ஆண்டுக் கட்டணம் உருபா 9–00
அரையாண்டுக் கட்டணம் ,, 4–50
தனியிதழ் 0–37

தென்மொழி, நெல்லிக்குப்பம், (தெ. ஆ. மாவட்டம்)

கோழி தின்ற தினை!

—[தமிழ்மகன்]—

அன்பிற்கு இருப்பிட மாகவும், பண்பிற்கு நிலைக்களனு கவும் திகழ்ந்தது நம் பண்டைத்தமிழ் நாடு ஈகையிரக்கமும், இல்லற வாழ்வும், காதலும், மறமும் கண்ணெனக்காத்து உலக மக்கட்கெல்லாம் வழிகாட்டிகளாய் வாழ்ந்து காட்டியவர் நம் வண்டமிழ் மக்களாவர். நாட்டினை நம்பியரும், வீட்டினை நங்கையரும் தங்கள் உயிரினும் மேலாகப் போற்றிவந்தனர். மனைக்குரியவள் மனைவி என்று வேறு எந்த நாட்டாரும் கையாளாத செயலடிப்படையில் பெயர்களிட்டு மகிழ்ந்தவர் மறத்தமிழ் மக்களாவர். இல்லறத்திற்குரிய, மனைத்தக்க மாண்புடையவளாகி, இல்வாழ்வை நல்வாழ்வென நடாத்திக் காட்டித் தன் கொழுநனையும், உயிரெனக்கருதினள், தமிழ் மங்கை. அன்பிற்கும் அருளுக்கும் வேண்டியவர் வேண்டாதார் என்ற வேறுபாடில்லை. உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற கண்மூடிப்பழக்கமில்லை. ஐயறிவுயிர் ஆறறிவுயிர் என்ற ஐயமேற்படுவதில்லை. இங்ஙனம் அடைக்குந் தாழில்லாத அன்பும், அஃறிணை உயிர்களிடத்தும் காட்டுகின்ற அருளும், அதனை வாழ்க்கை முறையில் நடத்திக் காட்டப்பயன்படும் பண்புந்தான் நம் பண்டைத்தாய்மாரிடத்து நிறைந்திருந்த நிலைத்த கொள்கைகளாகும். பண்டைக்காலத்துத்தாய்மாரின் உயர்ந்த பண்பாடுகளும் இல்லற மாட்சியின் சிறப்பும், ஏனையோரிடத்து நடந்து கொள்ளும் முறையும் நடை உடை சாயலும் இக்கால மகளிர்க்கு மட்டுமன்று, எக்கால மகளிர்க்கும் வழிகாட்டுவனவாக அமைந்துள்ளன. இப்படி வாழ்க்கை வழிகாட்டிகளாய் அமைந்துள்ள இல்லறத்தலைவியரையும், அவர்தம் இல்லறமாண்புகளையும், உள்ளத்தின் உயர்வுகளையும் கழக இலக்கியங்களில் மிகுதியாகக் காணலாம், கழக இலக்கியங்களில் ஒன்று புறநானூறு. அதிலுள்ள ஒரு பாட்டு இல்லாளின் இல்லறச் சிறப்பையும் அன்பின் முதிர்வான அருளையும் குன்றின் விளக்கெனக் காட்டுகிறது. அவ்வினிய அழகுக்காட்சியைக் காண்போம்:-

மலைகளால் சூழப்பட்டதும் மரங்கள் நிறைந்ததுமான ஒரு மாபெருங்காடு. அக்காடு கொடிகளாலும், செடிகளாலும் செறிந்து பச்சைப்பசேலென்று காட்சியளிக்கின்றது. பாடிவரும் அருவி, கூடிவாழும் உயிரினங்கட்கு உயிர்கொடுப்பது

போல் வளைந்து வளைந்து ஓடிக்கொண்டிருக்கிறது. நீலமலைகளில் கருமுகில்கள் தவழ்கின்றன. இவ்வழகிய காட்டின் நடுப்பகுதியில் ஓர் குடிசையிருக்கிறது. அக்குடிசையில் ஒரு வேடனும் வேட்டுவச்சியும் கருத்தொருமித்துக் கனிந்த வாழ்வு நடாத்தி வருகின்றனர். வேட்டையாடுவதே தொழிலாகக்கொண்ட வேடனும், அவன் கொண்டுவரும் பொருள்களைக்கொண்டு சமைத்திடும் அவளும் இன்புற்று, அன்பு வாழ்க்கை வாழ்ந்தனர் என்றால் அது வியப்பிற் குரியதன்றே ! தாங்கள் மட்டுமே நுகரும் இன்பமே, இன்பம் என்று கருதாது மற்ற உயிரினங்களும் இன்பம் துய்த்து வாழ்வதை விரும்பி இடையூறு கொடுக்காது வாழ்ந்து வந்தனர் என்பதை எண்ணும்போது நம்மையறியாது நமது உள்ளம் இறும்பூது எய்துகிறதன்றே ! இரக்கமின்றி விலங்குகளை வேட்டையாடுவதைத் தொழிலாகக் கொண்ட ஒருவனும், அதற்குத்துணையாக இருந்து வரும் ஒருத்தியும் மற்ற உயிரினங்களின்மேல் அன்பும் அதனின்றுகனிந்த அருளும் காட்டுதல் என்பது யாரும் எதிர் பார்க்காத ஒன்று. ஆனால் அன்பே உருவாகி நின்ற அவள் அஃறிணை உயிர்களிடத்தும் அன்பு செலுத்தியுள்ளாள் என்பது தான் நம்மையெல்லாம் ஈர்க்கச் செய்கிறது.

வழக்கம்போல் வேட்டைக்குச் சென்ற வேடன் அன்றும் வேட்டையாடி வீடுதிரும்பினான். அன்று அவனுக்குஒன்றும் அகப்படவில்லை போலும், அன்றைய பகலவனின் கொடிய வெப்பமும், அலைந்த அலுப்பும் வேடனைக் களைப்புறச் செய்தன. வந்தவன், வீட்டின் முன்றிலில் முசுண்டைக்கொடி நிழலில் படுத்துக் கண்ணயர்ந்தான். அவனருகில் அங்குவந்து பழக்கப்பட்ட கலைமானும் பிணையும் கலந்து மகிழத்தொடங்கின. வேடனுக்குஅருகில் அன்றைய இரவு உணவுக்கு வேண்டிய தினையை மான் தோலில் உலர்த்தி இருந்தாள் அவன் மனைவி. அப்பொழுது காட்டுக் கோழியும், இதல் எனும் ஒருவகைப் பறவையும் அங்கு வந்து அத்தினையைத் தின்றுகொண்டிருந்தன. வீட்டுவேலையில் ஈடுபட்டிருந்த வேட்டுவச்சி வெளியேவந்தாள், கோழி, தினையைத் தின்னுவதைக் கண்டாள். உடனே அதை விரட்டவும் முனைந்தாள். ஆனால் அதே நேரத்தில் அதனருகில் கணவன் அமைதியாக உறங்குவதையும், அவனருகில் கலையும் பிணையும் கலந்து விளையாடுவதையும் கண்டாள். கோழியைவிரட்ட முன்னேக்கிச் சென்ற கால்கள் பின்னேக்கிநடந்தன. சுற்றுமுற்றும் பார்த்து உள்ளூர மகிழ்ந்து நின்றாள். கோழியை விரட்டாவிட்டால் அன்றைய உணவுக்குரிய தினையை இழக்கநேரிடும், கோழியை விரட்டினால் இரண்டு வகைப் பழிகளைச் செய்தவளாவாள். ஒன்று களைப்பு நீங்க அயர்ந்து உறங்கும் கணவனைத் தூக்கத்தினின்று

விழிக்கச்செய்ய வேண்டி நேரும். தன் கணவனைக்கூட ஆறுதல் கூறித்தேற்றிவிடலாம். ஆனால் அச்சம் கொண்ட கலைக்கும் பிணைக்கும் இடையூறு செய்தால் அவற்றை எப்படி இக்காட்சியில் காண்பது? அவற்றிற்கு எவ்வகை ஆறுதல் சொல்லித் தேற்றுவது? ஆகையினால் அவள் அன்றைய உணவை இழக்க உறுதி கொண்டாள். தினையுண்ட, இதல் பறவையையும் கோழியையும் விரட்டாது பின்சென்றாள். அவளது அகம் எவ்வளவு தூய்மையாகவும் எளிமையுள்ளதாகவும் இருந்திருத்தல் வேண்டும்! இன்னா செய்தவர்க்கும் இனியவை செய்யும் செம்மையும், மன்னுயிரையும், தன்னுயிர் போல் காக்கும் திண்மையும் கொண்ட அவளது நெஞ்சத்தை நாம்வாயார வாழ்த்தினாலும், ஏடாக எழுதிக் குவித்தாலும் மிகையாகாது.

மற்றவர் பெறுகின்ற இன்பமே தமக்குத் துன்பமாக அமைந்தாலும் அகமகிழ்ந்து ஏற்றுக்கொள்கின்ற உயர்ந்த உள்ளத் தன்மையைத் தமிழ்த்தாய்மாரிடத்துக் காண்கின்றோம். உயர்திணை உயிர்களிடத்து மட்டுமன்றி அஃறிணை உயிர்களிடத்தும் அன்புகாட்டி, அவற்றின் இன்பங்கட்கு இடையூறு கொடுக்காது துன்பம் நேருங்காலை அத்துன்பத்தையும் துடைத்து, அவற்றின் பால் அருள்காட்டித் தமக்கு வருகின்ற இன்னலையும் இன்பமெனக் கொள்ளும் அன்புதவழ் தமிழ்ப்பெண்ணின் மாண்பினைப் படம் பிடித்துக்காட்டும் பாடல் இஃது;-

"முன்றில் முஞ்ஞையொடு முசுண்டை பம்பிப்
பந்தர் வேண்டாப் பலர்தூங்கு நீழல்
கைம்மான் வேட்டுவன் கனைதுயில் மடிந்தெனப்
பார்வை மடப்பிணை தழீஇப் பிறிதோர்
தீர்தொழில் தனிக்கலை திளைத்து விளையாட
இன்புறு புணர்நிலை கண்ட மனையோள்,
கணவன் எழுதலும் அஞ்சிக், கலையே
பிணைவயின் தீர்தலும் அஞ்சி, யாவதும்
இல்வழங் காமையின் கல்லென ஒலித்து
மான் அதள் பெய்த உணங்குதினை வல்சி
கானக் கோழியொடு இதல் கவர்ந் துண்டென
ஆர நெருப்பின் ஆரல் நாறத்
தடிவு ஆர்ந்திட்ட முழுவள் ளூரம்
இரும்பே ரொக்கலொடு ஒழுங்கு இனி தருந்தித்
தங்கினை சென்மோ பாண! தங்காது
வேந்து தரு விழுக்கூழ் பரிசிலர்க்கு என்றும்
அருகாது ஈயும் வண்மை
உரைசால் நெடுந்தகை ஓம்பும் ஊரே"

— புறம் - 320

பூதப்பாண்டியன் மனைவி

பெருங்கோப்பெண்டு.

மாரி—அறவாழி

"அரிமாவின் உளத்தையும் பெரும்படை வலிமையையுமுடைய வேந்தர் பலர் என்னோடு ஒப்பவந்து பொருதுவோம் என்பர். அத்தகையோரைப்போரின்கண் அலறப்பொருது அவர் தம் தேரை உடைத்துப் புறமுதுகிட்டோடச் செய்வேன், அப்படிச் செய்கேனாயின் மையுண்ட பேரமர்க்கண்களையுடைய என் இன்னுயிர் மனைவியை நான் நீங்கியவனாகுக! அறம் நிலைக்கும் அவைக்களத்து அறம்பிறழ்ந்த ஒருவனை வைத்துக் கொடுங்கோல் செய்தவனாகுக! மிக்க புகழுடைய இனிய நண்பர்களாம் மாவன், ஆந்தை, அத்துவஞ்சாத்தன், ஆதனழிசி, இயக்கன் முதலியவரின் மகிழ்நகை யார்ந்த நட்பை இழந்தவனாகுக! பல்லுயிரையும் புரக்கும் பாண்டிய அரசற் குடியுற் பிறவாது நீங்குவேனாகுக!"

இப்படி வெஞ்சின முரைத்த பூதப்பாண்டியனின் தலைநகர் ஒருநாள் அழகிழந்து, களையிழந்து, துயரத்தில் ஆழ்ந்து கிடந்தது. குடிமக்களின் முகங்களில் துன்பம் குடிகொண்டிருந்தது.

நகரத் தெருக்களில் வழக்கமாக எழும் இனிய முழவு ஓசைகளும், மாலைப்போதில் அங்காடிக் கடைகளிலிருந்து எழும் பெருத்த கூப்பாடுகளும், ஆடிமகிழ்விக்கும் கூத்தர் தம் காற்சிலம்பொலிகளும், பாடி மகிழ்விக்கும் பாணர்தம் பண்ணிசைகளும் அடங்கிக்கிடக்கின்றன.

அகல் நெடுந் தெருக்களில் வான்முட்ட எழுந்தோங்கி நின்ற வண்ண மாடங்கள், ஒளிதரும் விளக்குகளும் நெஞ்சிற்குக் களிதரும் நிகழ்ச்சிகளுமின்றி இருண்டு கிடக்கின்றன.

மறலியின் பிடியிலிருந்து மன்னனின் உயிரைப் போரிட்டு மீட்கமுடியாத தம்மின் திறமைக் குறைவை எண்ணி நால்வகைப் படைகளும் தலை கவிழ்ந்து நிற்கின்றன.

அரண்மனைக்குள் ஒரே அமைதி, புரண்டோடும் ஆற்று வெள்ளத்தைப்போலத் தம்மைப் புரந்தானை இழந்தவருத்தத்தால் காவலரும், ஏவலரும், அமைச்சரும் ஐம்பெருங் குழுவினரும் கண்ணீர் வடிக்கின்றனர்.

கன்னிமாடத்தில் யவனர் இயற்றிய வினைமாண்பாவை கையேந்து ஐஅகல் நிறைய நெய் சொரிந்து தலைநிமிர்ந்து எரியும் விளக்குகள் மங்கி அழுகின்றன. வெள்ளியன்ன விளங்கும் சுதை உரீஇச் செம்பு இயன்றன்ன செய்வு உறு நெடுஞ்சுவர் களில் அந்தப் பாவை விளக்குகளின் ஏக்கம்பளிச்சிடுகின்றது.

அவற்றினிடையே மடைமாண் நுண் இழைபொலிய தொடைமாண்டு, முத்துடைச் சலோகம் நாற்றி, வயமான் வேட்டம் பொறித்து, வியன் கட்கானத்து முல்லைப்பல் போது உறழ பூ நிரைத்து மெல்லிதின் விரித்த சேக்கைக் கட்டில் பொலி விழந்து கிடக்கின்றது. அதற்குரிய மடமங்கை மலரணையில் வீற்றிராமல் மண்ணுறழக் கிடக்கின்றாள். சேடியரும் செவி லியரும் அவளைத் தாங்கித் தேற்றுகின்றனர். அவளது நல்லடி வருடுகின்றனர். நரைபடா நறுமென் ஐம்பால் பற்றித் தடவு கின்றனர். குறியவும், நெடியவுமான உரைபல பயிற்றி அவளைத் தேற்றும் வாயின்றித் தாமும் விம்முகின்றனர். "இன்னே வரு குவர் இன்துணையோர்" என்று முன்பெலாம் மொழிந்த ஆறு தல் மொழிகள் இன்று அவர் நாவுக்கெட்டாதொழிந்தன.

அரசி பெருங்கோப்பெண்டு வடிக்கும் கண்ணீர் ஊற் றெனச் சுரக்கின்றது. அக்கண்ணீர்ச் சுரப்பு, அவளும் அவனும், ஒன்றுபட்ட கருத்தானும், புலமை நிறைந்த கலைத்திறத்தானும் காதல் கொண்டு வாழ்க்கைக் கூட்டை அமைத்த நிகழ்ச்சிகளை நினைவிற் கொணர்கின்றது, ஆம்! பூதப்பாண்டியன் வெறும் நாட்டுப்புரவலனாக மட்டும் திகழ்ந்தானில்லை, பாட்டுப்புலவனாக வும் திகழ்ந்தான். அவனுக்கு மனைவியாக வாய்க்கும் நறும் பேறுற்ற பெருங்கோப்பெண்டும் ஒரு சிறந்த புலவியே. இரு வரும் யாத்தளித்த பாடல்கள் தமிழிலக்கியத்தின் இருபெரும் முத்துக்களாகத்திகழ்கின்றன.

வேந்தனின் உயிர் பரித்த வெம்பகல் கழிகின்றது. வேந்தன் பிணத்தருகிலேயே கவிழ்ந்த ஆயிரம் தலைகளும் நிமிர்கின்றன. நிமிராது கிடக்கும் முகம் ஒன்றே. அது அரசியின் பொலிவழிந்த முகம்! அடிபாய்ந்த மரத்தின் கிளைமீது வெட்டுண்ட பசலைக்கொடி கிடப்பதைப் போன்றிருக்கின்றது அவள் கிடக்கை.

அகிற்கட்டைகளும் ஆரப்பலகைகளும் மலை போல அடுக்கப்பட்டிருக்கின்றன. பூதப்பாண்டியனின் பொன்னுடல் கடைசிமுறையாக அழகு படுத்தப்பட்டு மக்கள் வணக்கத்துடன் அகிற்கட்டைகளின்மேல் கிடத்தப் பட்டுத் தீ வைக்கப்படுகின்றது. தீ! செந்தீ! அவன் உடலுக்கு மட்டுமா? ... இல்லை! ... அவனது ஆட்சிக்கு, அறத்திற்கு, மறத்திற்கு அன்புக்கு அவளுக்கு... எல்லாவற்றிற்குமே தான்!

கொழுந்துவிட்டெரியும் நேரம். அதுவரை கொடிய வேடனின் கூரிய அம்புக்கு இலக்கான புறுவைப்போல விழுந்து கிடந்த அரசி பதைத் தெழுகின்றாள். தன் கணவரின் உயிரைப் பறித்த காலனின் உயிரைப் பழிவாங்கப் புறப்பட்டாற் போல் தீயில் பாய்கிறாள். இளிவரலின் உருவங்களாக நின்ற மாவனும் ஆந்தையும் அரசியின் முன் பாய்ந்து சென்று தடுக்கின்றனர். மாவன் வேண்டுகிறார்,

"அன்னாய்! ஒருகண்ணிழந்து துன்புறும் யாங்கள் இரு கண்களையும் இழந்து அழிய வேண்டும் என்பது தங்கள் விருப்பமா? வேண்டாம். தீப்பாயும் முடிவைத் தவிர்த்துவிடுங்கள் ..." ஆந்தை வேண்டுகின்றார்,

"ஆம் தாயே! தந்தையை இழந்த நாடு தாயையும் இழந்து எவ்வாறு வாழும் ?... அரசரை இழந்த துயரே எம் நெஞ்சைச் செயலிழக்கச் செய்கின்றது... இந்நிலையில் தங்களையும் இழக்க ஒருபோதும் இசையோம்.;'

இவ்விருவர் வேண்டுதலையும் அரசி, செவி மடுத்தாளில்லை. இரண்டடி முன் நடக்கிறாள். அதைக்கண்டு அக்கு

வஞ்சாத்தனும் ஆதனழிசியும் பாய்ந்தோடி வருகின்றனர். தீப் பாய்வதைக் கைவிடுமாறு வேண்டிக் கெஞ்சுகின்றனர்.

"பல நலனும் சான்ற பெருமக்களே! அன்புப் பெருந் தகையீர்!... கணவனெடு, இறந்துபோ" என்று என்னை விடுக் காது "தவிர்க" எனத் தடுக்கும் சூழ்ச்சி நிறைந்த பெருமக் களே!... இதைக் கேண்மின்! நெய்பெய்யப்படாமல் வெள்ளரி விதை போன்ற வெள்ளிய நறிய புளி கூட்டிய பழஞ்சோற்றை உணவாகக்கொண்டு படுக்கப் பாயுமின்றி... பருக்கைகளாலான படுக்கைமேற் கிடக்கும் கைம்மை நோன்பால் வருந்தும் பெண் அல்லேம் யாம்!... புறங்காட்டின் கண் விளைந்த கரிய உருத்து கின்ற முட்களால் அடுக்கப்பட்ட பிணப் படுக்கை, உங்களுக்கு அரியதாக இருக்கட்டும்!... ஆனல் திண்தோள் படைத்த காதற் கொழுநனைத் துறந்து பொலி விழந்து நிற்கும் எனக்கு, அரும்பவிழ்ந்து இதழ் மலர்ந்த தாமரை நிறைந்த தண்ணிய நீர்ப் பொய்கையும், கொடுமையான தீக்குழியும் ஒரே தன்மையுடை யனவே யாம்! எனவே எவரும் என்னைத் தடுத்தல் வேண்டாம்!"

அரசியின் உருக்கமான உரை கேட்டோர் மனம் நெகிழ்ந்து கண்ணீர்வடித்தனர். பெருங்கோப்பெண்டு தீப்புகுந்து மறைந்தனள். ஆம்!... கணவன் உயிரைத் தன்னுயிர்கொண்டு தேடப் புறப்பட்டனள்.

தீப்பாயும்போது அவள் பாடிய பாடல், புறநானூறு என்னும் பொற்கம்பியினூடே தனி மணியாக என்றென்றும் ஒளிர்விடும்.

இலக்கியம்

அரசியல்

மொழியாராய்ச்சி

அறிவியல்

நூல்களை

நல்லமுறையில்

வெளியிடுகின்றோம்.

வள்ளுவர் பதிப்பகம்

நெல்லிக்குப்பம்,

(தெ. ஆ.)

தமிழ்நாடு.

தென்மொழி

விளம்பரக் கட்டணம்.

அட்டை நான்காவது பக்கம் முழுமையும் ரூ. 50-00

,, இரண்டாவது அரைப்பக்கம் ரூ. 25-00

,, மூன்றாவது முழுப்பக்கம் ரூ. 40-00

,, அரைப்பக்கம் ரூ. 20-00

உள்ளே முழுப்பக்கம் ரூ. 30-00

,, அரைப்பக்கம் ரூ. 15-00

,, கால்பக்கம் ரூ. 8-00

வரி விளம்பரங்களுக்குத் தனியே எழுதவும்.

அமைச்சர்

தென்மொழி

நெல்லிக்குப்பம்,

தெ. ஆ.மாவட்டம் (தமிழ்நாடு)

உங்கள் நிறைவே எங்கள் நிறைவு!

சிறு அறிக்கைகள்

முதல்

நூல்கள் வரை

தெளிவாகவும் எடுப்பாகவும்

அச்சிட்டுத் தருகின்றோம்

உறுதியானநூற் கட்டடங்களும்

குறித்த காலத்தில்

செய்து தரப்படும்

குரு அச்சகம்

நெல்லிக்குப்பம்.

'தென்மொழி'

தமிழுக்குத் தரும் புத்திலக்கியம்!

அறு பருவத் திருக்கூத்து!

துரை. மாணிக்கம்

எழுதும்

இனிய தொடர் பாடல்

அருமையான பருவ இலக்கியம்!

ஒவ்வொரு பருவத்திலும் நானிலத்தே காணும் இயற்கை எழில், மக்கள் நடப்பு, முதலியவற்றைச் சுவை பொதுள, நூறு நூறு அடிகளான் பண்டைய இலக்கிய மரபு கெடாமலும், புதுமை நிகழ்ச்சிகள் விரவி வரவும் இனிமையாகச் சமைத்த இலக்கிய நூல். தமிழில் பருவநூல் இல்லாத ஒரு குறையை நிறைவு செய்கின்றது.

விரைவில் தென்மொழியில் தொடர விருக்கின்றது.
இலக்கியத் தும்பிகட்கு இனிய நறவு!
பாடல் வேட்பார்க்குக் கனிந்த பழக்குலே!
நெடிய இன்பங் கேட்பார்க்கு நிலாச்சோறு!

இன்றே உறுப்பினராகுங்கள்.

"தென்மொழி"

நெல்லிக்குப்பம். (தெ. ஆ மாவட்டம்,)

வள்ளுவர் பதிப்பக உரிமையாளர், சு. இரா செகந்நாதன் அவர்களால் நெல்லிக்குப்பம் (தெ. ஆ. மாவட்டம்) குரு அச்சகத்தில் அச்சிடப்பட்டு, பெருஞ்சித்திரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்டது.